SAPTHAGIRI (TAMIL)
ILLUSTRATED MONTHLY
Volume:1, Issue: 10, Pages:56
May -2022, Price Rs.5/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

மே 2022, விலை ரூ.5/-



திருமலை
ஸ்ரீபத்மாவதி ஸ்ரீநிவாச பரிணயோத்ஸவம்
2022, மே 10 முதல் 12 வரை



## திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
## 04-06-2022 முதல் 13-06-2022 வரை

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 04-6-2022 | சனி | --- | சேனாதிபதி உத்ஸவம், அங்குரார்ப்பணம் |
| 05-6-2022 | ஞாயிறு | திருச்சி உத்ஸவம், துவஜாரோஹணம் | பெரிய சேஷ வாகனம் |
| 06-6-2022 | திங்கள் | சிறிய சேஷ வாகனம் | ஹம்ஸ வாகனம் |
| 07-6-2022 | செவ்வாய் | சிம்ம வாகனம் | முத்துப்பந்தல் வாகனம் |
| 08-6-2022 | புதன் | கல்ப விருக்ஷ வாகனம் | சர்வ பூபால வாகனம் |
| 09-6-2022 | வியாழன் | பல்லக்கில் மோகினி அவதாரம் | கருட வாகனம் |
| 10-6-2022 | வெள்ளி | ஹனுமத் வாகனம்<br>மாலை : வஸந்தோத்ஸவம் | யானை வாகனம் |
| 11-6-2022 | சனி | சூரியப்பிரபை வாகனம் | சந்திரப்பிரபை வாகனம் |
| 12-6-2022 | ஞாயிறு | திருத்தேர் | குதிரை வாகனம் |
| 13-6-2022 | திங்கள் | பல்லக்கு உத்ஸவம், தீர்த்தவாரி அவப்ருதோத்ஸவம், சக்ர ஸ்நானம் | திருச்சி உத்ஸவம் துவஜாவரோஹணம் |

## அப்பளாயகுண்டா ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
## 09-06-2022 முதல் 18-06-2022 வரை

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 09-6-2022 | வியாழன் | ---- | சேனாதிபதி உத்ஸவம், அங்குரார்ப்பணம் |
| 10-6-2022 | வெள்ளி | திருச்சி உத்ஸவம், துவஜாரோஹணம் | பெரிய சேஷ வாகனம் |
| 11-6-2022 | சனி | சிறிய சேஷ வாகனம் | ஹம்ச வாகனம் |
| 12-6-2022 | ஞாயிறு | சிம்ம வாகனம் | முத்துப்பந்தல் வாகனம் |
| 13-6-2022 | திங்கள் | கல்ப விருக்ஷ வாகனம் | சர்வ பூபால வாகனம் |
| 14-6-2022 | செவ்வாய் | பல்லக்கில் மோகினி அவதாரம் | கருட வாகனம் |
| 15-6-2022 | புதன் | ஹனுமத் வாகனம்,<br>மாலை வஸந்தோத்ஸவம் | யானை வாகனம் |
| 16-6-2022 | வியாழன் | சூரியப்பிரபை வாகனம் | சந்திரப்பிரபை வாகனம் |
| 17-6-2022 | வெள்ளி | திருத்தேர் | குதிரை வாகனம் |
| 18-6-2022 | சனி | பல்லக்கு உத்ஸவம், தீர்த்தவாரி அவப்ருதோத்ஸவம், சக்ர ஸ்நானம் | திருச்சி உத்ஸவத்தில் துவஜாவரோஹணம் |



*ஏதாந்ந ஹந்துமிச்ச$_3$ாமி*
*க்$_4$நதோऽபி மது$_4$ஸூத$_3$ந ।*
*அபி த்ரைலோக்யராஜ்யஸ்ய*
*ஹேதோ: கிம் நு மஹீக்ருதே ॥*



**மதுசூதனா! என்னைக் கொன்றாலும் மூன்று உலகங்களிலும் உள்ள ராஜ்யங்களின் அரசாட்சி என்ற காரணத்திற்காகக்கூட நான் இவர்கள் எல்லோரையும் கொல்ல விரும்பவில்லை. பிறகு, இப்பூவுலகுக்காகக் கொல்ல விரும்பவில்லை என்பதைச் சொல்லவும் வேண்டுமா?**

*– ஸ்ரீமத் பகவத் கீதை 1–35*

*உபவீதிநமூர்த்வ புண்டாவந்தம்*
*த்ரிஜகத் புண்ய பலம் த்ரிதண்ட ஹஸ்தம் ।*
*சரணாகத ஸார்த்தவாஹமீடே*
*சிகயா சேகரிணம் பதிம் யதீநாம் ॥*



**யஜ்ஞோபவீதத்தை அணிந்தவராய், ஊர்த்வ புண்ட்ரத்தைத் தரிப்பவராய், மூவுலகின் புண்ணியத்தின் பலனாய் த்ரிதண்டத்தைக் கையில் கொண்டவராய், சரணமடைந்தவர்களின் கூட்டத்தை நடத்துமவராய், குழற்கற்றையால் திருமுடியழகு பெற்றவராய், ஸந்ந்யாஸிகளுக்கு தலைவராயுள்ள ஸ்ரீபாஷ்யகாரரை துதிக்கின்றேன்.**

*– ஸ்ரீ யதிராஜ ஸப்ததி 799*

உங்கள் வீட்டிற்கே திருமலையப்பன்
நேரில் வந்த அநுபூதியைப் பெறுங்கள்



"ஸப்தகிரி" மாத
இதழுக்கு
சந்தா செலுத்தி

திருமலையப்பனின்
எழுத்தமுதை
மாதாமாதம் பெறுங்கள்







திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

**சமய மாத இதழ்**

(தெலுங்கு, தமிழ், கன்னடம், இந்தி,
ஆங்கிலம், சமஸ்கிருத மொழிகளில்)

## சந்தா விவரங்கள்

வருடச் சந்தா : ரூ.60.00
ஆயுள் சந்தா : ரூ.500.00
அயல்நாட்டு வருடச் சந்தா : ரூ.850.00

சமஸ்கிருத மொழி இதழுக்கு ஆயுள் சந்தா கிடையாது.

**விவரங்களுக்கு :**

பிரதான ஆசிரியர்
தி.தி.தே. அச்சக வளாகம்,
கபில தீர்த்தம் சாலை, திருப்பதி-517 507.
தொலைபேசி : 0877-2264543,
2264363.



வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி


சமய மாத இதழ்

மே 2022

மலர் 01

இதழ் 10


## உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| அன்னமய்யா போற்றும் நரசிம்ம அவதாரம் - திருமதி இராதாராமநாதன், திருப்பதி. | 7 |
| திருமலையப்பனின் திருவருள் - திரு.காசிநாதன், கும்பகோணம். | 10 |
| ஆதிசங்கரர் அருளிய கோவிந்தாஷ்டகம் - முனைவர்.செந்திலாண்டவன், சென்னை. | 11 |
| திங்கள் தோறும் ஒரு திருவேங்கடப் பாசுரம் : திருமலையில் மத யானைகள் செய்யும் மகத்தான வழிபாடு - பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி. | 14 |
| தாஸ சாகித்யத்தில் திருவேங்கடவன் - திரு. வி. வேங்கடரமணா, திருப்பதி. | 18 |
| ஸ்ரீராமனின் திருக்கல்யாண குணங்கள் : ஏக ப்ரியதர்சனன் - திரு. உ.வே. வேளுக்குடி கிருஷ்ணன் ஸ்வாமி, சென்னை. | 20 |
| ஜோதிட சாஸ்திரம்:வக்கிரமான கிரகங்கள் கொடுக்கும் பலன்கள் - முனைவர் ஆ.முத்து கிருஷ்ண ஆச்சாரி, திருவல்லிக்கேணி. | 22 |
| சமத்துவ நாயகன் ஸ்ரீமத் இராமாநுஜர் - திருமதி மைதிலி சம்பத், செகந்திராபாத். | 24 |
| திருமலையில் அஞ்சனாத்ரி ஹனுமன் பிறந்த இடம் - திருமதி இராஜலக்ஷ்மி, கேரளா. | 31 |
| 108 திவ்வியதேச வைபவம் – திருச்செங்குன்றூர் - உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை. | 35 |
| அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும் - உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை. | 38 |
| ஸ்ரீமத் பகவத்கீதை - டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர். | 40 |
| அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை : சிகண்டி - திரு. சத்யதாரா, சென்னை. | 43 |
| ராசிப்பலன்கள் : மே 2022 -முராரி. எம்.வி. நரநாரயணன், சேலம். | 47 |
| ஆயுர்வேதம் – பாகற்காய் - திருமதி வி.உஷா, திருப்பதி. | 48 |
| நீதிக்கதைகள் : உலகில் உன்னுடையது என்பது எதுவுமில்லை - திரு. ஜெ.சுவாமிநாதன், சென்னை. | 51 |
| சித்திரக்கதை : ஹனுமனின் பக்தி | 52 |



சிறப்பு ஆசிரியர் :
Dr. K.S. ஜவஹர் ரெட்டி, ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :
Dr. K. ராதாரமணா, எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
திரு. பி.ராமராஜு, எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா



பிரதிகளுக்கு:
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360


நீங்கள் ஸப்தகிரி இதழை www.tirumala.orgயில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/ கருத்துக்கள்/புகார்களுக்கு sapthagiri.helpdesk@tirumala.org

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.5/- |
| வருடச்சந்தா | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | ரூ.500/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.850/- |


இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்


### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : உபயநாச்சிமார்களுடன் திருமலையப்ப ஸ்வாமி, திருமலை.

பின்னட்டை : அஞ்ஜனாதேவியுடன் ஹனுமன், ஆகாசகங்கை திருமலை.

# திருநட்சத்திர(ஜெயந்தி) விழாக் கொண்டாட்டம்

ஜெயந்தி என்பது அவதார நாளைக் குறிக்கும். இச்சொல் வெற்றி (ஜெயம்)மையும் குறிக்கும். பெரும்பாலும் இச்சொல் அவதாரத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. "தர்மம் எப்பொழுதெல்லாம் நலிவடைகிறதோ அப்பொழுதெல்லாம் நான் அவதரிப்பேன்" என்று பகவான் கீதையில் கூறுகின்றார்.

பொதுவாக "பிறப்பற்ற எம்பெருமான்" இவ்வுலகத்தில் நமக்காக அவதரித்த தினத்தை ஜெயந்தி தினமாகக் கொண்டாடுகிறோம். நாம் கர்மத்தின் அடியாகப் பிறக்கிறோம். பரமாத்மாவோ கருணையின் அடியாக அவதரிக்கின்றார். இதனை நாம் பகவத்கீதையின் வாயிலாக தெரிந்து கொள்ளலாம். கீதையில் அர்ஜுனன் கண்ணனிடம் "கண்ணா உன் பிறப்பு சூரியனுக்குப் பிந்தியது. ஆனால் ஆதியில் யோகம் பற்றி சூரியனுக்கு சொன்னேன் என்று சொல்வது பொருந்துமா? என்று கேட்கின்றபோது, பகவான், உனக்கும் எனக்கும் பல ஜென்மங்கள் கடந்து விட்டன. அர்ஜுனா உன் பிறப்பு உனக்குத் தெரியாது. ஆனால் எனக்கு எல்லாம் தெரியும் என்கிறார். பகவானுடைய பிறப்பு திவ்வியமானது.

*"அஜாயமானோ பஹுதா விஜாயதே"* என்று பகவான் பல பிறவி எடுப்பது தெரிய வருகிறது. ஆனால் "அஜாயமானோ" என்ற சொல்லிற்கு பிறப்பில்லாதவன் என்று பொருள். பிறப்பற்றவன் தன் சங்கல்பத்தினால் பிறப்பதுதான் ஜெயந்தி. இதனை நம்மாழ்வார் பாசுரத்திலும் காணலாம். அதாவது *"எளிவரும் இயல்வினன் நிலை வரம்பு இலபல பிறப்பாய் ஒளிவரு முழு நலம் முதல் இல கேடு இல, வீடு ஆம் தெளிதரு நிலைமையது ஒழிவு இலன்"* என்பதில் "பல பிறப்பாய் ஒளி வரும் முழு நலம்" என்பதுதான் ஜெயந்தி.

குறிப்பாக வைணவ மரபில் எம்பெருமானின் அவதார உத்ஸவத்தை குறிப்பதற்காக ஜெயந்தி என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. மத்ஸ்ய ஜெயந்தி முதற்கொண்டு கல்கி ஜெயந்தி வரை பரமாத்மாவிற்குக் கொண்டாடப்படுகிறது. அவ்வகையில் இம்மாதம் (மே) அழகே வடிவான அழகப்பிரானான நரசிம்மருக்கும், தேவர்களுக்கு அமிழ்து அளித்திட பாற்கடலை மேரு மலையை மத்தாக கொண்டு கடையும் போது அதைத் தாங்கிய கூர்ம நாதருக்கும், தந்தை சொல்மிக்க மந்திரமில்லை எனும் கூற்றுப்படி வாழ்ந்த பரசுராமருக்கும் ஜெயந்திவிழா கொண்டாடப்படுகிறது. பரமாத்மாவிற்குப் பிறகு பரமாத்மாவோடு நேரடி தொடர்புடைய ரிஷிகளுக்கும் ஜெயந்தி விழா கொண்டாடப்படுகிறது. அவ்வகையில் இம்மாதம் பிருகு மகரிஷிக்கும் ஜெயந்தி விழாக் கொண்டாடப்படுகிறது.

ஆழ்வார்கள், ஆசாரிய புருஷர்கள் ஆகியோரின் அவதாரம் நிகழும் பொழுதெல்லாம் தர்மம், ஞானம், சாத்வீகம், ஒழுக்கம் ஆகியவை வெற்றிப் பெறுகின்றன. இவற்றிற்கு எதிரான தீமைகள் அனைத்தும் தோல்வியடைகின்றன. மக்களும் நன்னெறியில் செல்லத் தலைப்படுகின்றனர். இவ்வாறு நல்லவை வெற்றி பெற அதாவது ஜெயம் அடைவதற்குக் காரணமாக இருப்பவர்கள் ஞானிகள். அவர்கள் அவதரித்தத் திருநாளையும் ஜெயந்தி நாளாக கொண்டாடுகின்றோம்.

அவ்வகையிலே இம்மாதம் நம்மாழ்வாரையே குருவாகப் பற்றிய மதுரகவி ஆழ்வாருக்கு ஜெயந்தி விழா கொண்டாடப்படுகிறது. அவ்வாறே ஆசார்யர்களும் ஆழ்வார்களை அடிபற்றி பரமாத்மாவின் சம்மந்தம் பெறுகின்றனர். ஆதலால் அவர்களுக்கும் ஜெயந்தி விழா கொண்டாடப்படுகிறது. இம்மாதம் விசிஷ்டாத்துவைதத்தை உலகிற்கு பறைசாற்றிய இராமானுஜருக்கும், அவருடைய சீடரான அனந்தாழ்வான் மற்றும் முதலியாண்டானுக்கும், அத்வைதத்தை பாரெங்கும் போதித்த சங்கராசாரியருக்கும் ஜெயந்தி விழாக் கொண்டாடப்படுகிறது. அதேபோன்று திருவேங்கடமுடையானைப் போற்றி தெலுங்கில் கீர்த்தனைகள் பல பாடிய அன்னமய்யா மற்றும் வேங்கமாம்பாவிற்கும் இம்மாதத்தில் ஜெயந்தி விழாக் கொண்டாடப்படுகிறது.

இவ்வாறு இம்மாதத்தில் எம்பெருமான், ரிஷிகள், ஆழ்வாராசாரியர்கள் என மூன்று வகையாகப் பிரித்து ஜெயந்தி விழாக் கொண்டாடப்படுவது முப்புரிவூட்டுவதாக உள்ளது..



# அன்னமய்யா போற்றும் நரசிம்ம அவதாரம்



அன்னமய்யா தன் வாழ்க்கையைத் திருவேங்கடவனுக்கே அர்ப்பணித்து, ஹரி அவதார மகிமைகளைப் பாடி பரவசித்தவர். அவற்றில் ஆழ்ந்து அனுபவித்து தானும் உய்ந்ததோடு உலகோர் அனைவருமே உய்வதற்கான வழிவகுத்த உயரிய பாகவதோத்தமர். அனைத்துப் புராணங்களும் போற்றும் அவதாரம் நரசிம்ம அவதாரம். பாகவதப் புராணம் கிருஷ்ணாவதாரத்தை அதி அற்புதமான அவதாரம் என்று புகழ்கிறது. நரசிம்ம அவதாரம் அன்னமய்யாவை மிகவும் கவர்ந்த அவதாரம் எனலாம். வேதாத்ரி, மங்களகிரி, கேதவரம், அகோபலம், மட்டபள்ளி, கதிரி என மொத்தம் 5 நரசிம்ம க்ஷேத்திரங்கள் ஆந்திர மாநிலத்தில் மட்டும் உள்ளன. அவற்றுள் பல க்ஷேத்திரங்களில் உள்ள மூர்த்திகளை அன்னமய்யா தன் பாமாலைச் சூட்டி அழகுபடுத்தி உள்ளார். அன்னமய்யா போற்றும் நரசிம்ம வைபவத்தை ஒரு சில பாடல்களிலிருந்து தொகுத்துக் காண்போம்.

நரசிம்ம அவதாரத்தின் மகிமை தான் என்ன? ஏன் நினைத்தவுடனே மனதில் நிலைக்கின்றான் அவன். நரனும் சிம்மமும் கூடிய அந்த உருவத்தில் அப்படி என்ன சிறப்பு? பகலிலோ, இரவிலோ, மனிதனாலோ, மிருகத்தாலோ, எந்தவிதமான ஆயுதங்களினாலோ தனக்கு அழிவு வரக்கூடாது என்ற நிபந்தனைகளோடு கூடிய வித்தியாசமான வரத்தைக் கேட்டான் இரண்யகசிபு. பிரம்மாவும் உடனே அளித்து விட்டார். பிரகலாதனோ சேதனன், அசேதனன், அசையும் அசையா பொருட்கள் அனைத்திலும் உள்ளும், புறமும் இடைப்பட்ட இடங்களில் எல்லாம் ஹரி வியாபித்திருக்கிறான் என ஆணித்தரமாக அடித்துச் சொல்லி விட்டான். எனவே இவர்கள் மூவரின் கோரிக்கையை நிறைவேற்றவே நரம் கலந்த சிம்ம ரூபமாகத் தோன்றினான் நரசிம்மன். *''எந்த உபகாரியோ ஹிரண்யகசிபுடு''* ஆஹா! இந்த இரண்யகசிபுதான் நமக்கு எவ்வளவு பெரிய உபகாரம் செய்து விட்டான். இல்லையென்றால் இந்த அவசரத் திருக்கோலமான நரசிம்மர் கிடைத்திருப்பாரா? என்று பாடி மகிழ்கிறார் அன்னமய்யா.

அன்னமய்யா நரசிம்மனை “பிரகலாத வரதன்” என்ற அடைமொழியுடனேயே அழைக்கிறார்.


பார்க்கவ நரசிம்மர்


யோகாநந்த நரசிம்மர்


சத்ரவட நரசிம்மர்


காரஞ்ஜ நரசிம்மர்


வராஹ நரசிம்மர்


ஜ்வாலா நரசிம்மர்

*"ஸேவிஞ்சரோ ம்ரொக்கரோ செலுலால, ஜனுலால கைவசமை யுன்னவாடு கருணாகருடு"* என்ற பாடலில் வேதகோஷங்கள் முழங்க, சுமங்கலிப் பெண்கள் ஆரத்தி சுற்ற, ஒளி வீசும் முகத்துடன் பலம் பொருந்திய நரசிம்மன் மென்மையாக மலர்போல் அமர்ந்திருக்கிறான். பொன்னாலான கருடனின் மீது, மடியில் லக்ஷ்மி அமர்ந்திருக்க, அவளை நோக்கிய படி இளநகையுடன் காட்சித் தருகிறான். நினைத்த வுடன் நினைத்த இடத்தில் தோன்றிய அந்த கருணா மூர்த்தியை வழிபடுங்கள். பக்தர்களுக்கு வரமளிப்ப தற்காகவே காத்துக் கொண்டிருக்கிறான் என்கிறார். ஆதிமூர்த்தியான இந்த நரசிம்மன் உவ்விள்ளூர் (ஆந்திர மாநிலத்தில்) க்ஷேத்திரத்தில் இரு தோள்க ளிலும் பூமாலை அணிந்து சங்கு சக்கரம் ஏந்திய அபய ஹஸ்தத்துடன் லக்ஷ்மி தேவியுடன் தேவர்கள் புடைசூழ, நாரதருடன் சேர்ந்து பாடல்களைக் கேட்ட வண்ணம் அமர்ந்திருக்கிறான்.

நரசிம்ம க்ஷேத்திரங்களில் அகோபலம் 108 திவ்ய க்ஷேத்திரங்களில் ஒன்று. நரசிம்மனின் பலத்தை அகோ! என்று வியந்து கூறுவதால் அகோ பலம் என்றும், அம்மலையின் ஸ்திரத்தன்மையை குறிக்கும் வகையில் அகோபிலம் என்றும் அழைக்கப் படுகிறது. இம்மலையில் தான் உக்ர ஸ்தம்பம் என்ற தூணிலிருந்து வெளிப்பட்டு இரண்யனை வதம் செய்தார் நரசிம்மர்.

*"அளந்திட்ட தூணை அவன் தட்ட ஆங்கே*
*வளர்ந்திட்டு வாளுகிர்ச் சிங்க உருவாய்*
*உளந்தொட்டு இரணியன் ஒண் மார்வகலம்*
*பிளந்திட்ட கைகளால் சப்பாணி.... "*

என்று பெரியாழ்வார் சப்பாணி கொட்டி மகிழ் கிறார். *"அணிசமு தலச ரோ அஹோபலம்"* என்ற கீர்த்தனையில் அம்மலையை இவ்வாறு வர்ணிக் கிறார் அன்னமய்யா. அகோபலம் ஹரி நிவாசம் செய்யுமிடம். அரனும், பிரம்மனும் வணங்கும் க்ஷேத்திரம். அருணனின் ஒளிக்கிரணங்களால் ஒளி விடும் சிகரத்துடன் மிக அழகாக விளங்கும் க்ஷேத்தி ரம். எண்ணிலடங்கா பலன்களைக் கொடுக்க வல்லது. ஆனால் அசுரர்களால் அடைய முடியாதது என்கிறார்.

நரசிம்மன் சின்மயாகாரன், தயாநிதி, தினகரனின் தேஜன், தெய்வ சிகாமணி என்றெல்லாம் புகழாரம் சூட்டுகிறார் அன்னமய்யா. நரசிம்மன் தனது வலது நேத்திரத்தினால் அருளும்போது ஞானம், ஐச்வரியம், ஆரோக்கியம், அன்னம் இவை எல்லாம் கிடைக்கின்றன. இடது நேத்திரத்தினால் அருளும் போது, பலத்தையும் புஷ்டியையும் அளிக்கும் பாலைத் தரும் பசுக்கள், குதிரைகள், நல்ல புத்திரர்களையும் அருளுகிறார். மரணபயம் நீங்கவும் நிலையான நித்யானந்தத்தைப் பெறவும் நரசிம்மனை தியானிக்க வேண்டும். அவன்

*"நம்மின வாரினி பூனுக காசே போஷகுடு"*
*"தலசினவாரிணி சேபடகானி காசே விபுடு!"*
*"பனிபூனி வராலிச்சே பிரஹ்லாதவரதுடு"*
*"தானகமை வராலிச்சே தாசுலகு தேவுடு"*

திருமாலின் பத்து அவதாரங்களில் இரண்டாவது அவதாரம் கூர்ம அவதாரம். பாற்கடலை தேவர்கள், அசுரர்கள் இரு பக்கத்தில் நின்று கடைந்த போது, மஹாவிஷ்ணு ஆமை வடிவம் எடுத்து பாற்கடலை கடைவதற்கு மேரு மலையை தன் மீது தாங்கி பிடித்து உலக நன்மைக்காக பல்வேறு அபூர்வ படைப்புகள் உண்டாவதற்கு வழி வகுத்தார். இவ்வாறு கடைந்த போது மஹாலக்ஷ்மி தாயார் வெளிப்பட்டது உலகத் திற்குக் கிடைத்த வரப் பிர சாதம் ஆகும்.



"பனிபூனி, பூனுக" – தன்னை நம்பியவரை காப்பதையே தனது தொழிலாகக் கொண்டவன். "சேபடகானி" – ஒரு கணத்திலேயே, "தானகமை" – எண்ணிலடங்கா வரமளிப்பவன் நரசிம்மன் என வியந்து போற்றுகிறார் அன்னமய்யா. "ஹரி வம்சம்" என்ற கிரந்தத்தில் இராமன் அகோபல நரசிம்மரை வணங்கி சீதையை மீட்கவும், இராவணனை வெல்வதற்குத் தேவையான பலத்தைப் பெற்றதாகக் கூறப்படுகிறது. பத்மாவதி ஸ்ரீநிவாசக் கல்யாணத்தில், பிரம்மா, சிவன் உட்பட அனைத்து தேவர்களும், ரிஷிகள், முனிகளும் விருந்தாளிகளாக வந்திருக்கிறார்கள். கல்யாண விருந்து சமையலை யாருக்கு நிவேதனம் செய்வது என்று ஸ்ரீநிவாசனைக் கேட்டனராம். அவர் உடனே அகோபில நரசிம்மருக்கு நிவேதனம் செய்யும்படி கேட்டுக் கொண்டாராம்.


இந்நிகழ்ச்சியைக் குறிக்கும் வகையில் இன்றும் ஒரு தூணில் ஸ்ரீநிவாசன் திருமணக் கோலத்தில் நரசிம்மரை வணங்கி நிற்கும் சிற்பம் காணப்படுவதாகக் கூறுகின்றனர். இராமன், ஸ்ரீநிவாசர் இருவராலும் வணங்கப்பட்டதால் "பெரிய பெரிய பெருமாள்" ஆகிறார் நரசிம்மர் (ஸ்ரீரங்கம் ரங்கநாதர் பெரிய பெருமாள்).

"ஜ்வாலா அகோபல மாலோல க்ரோட காரம்ஜ பார்க்கவா, யோகானந்த, சத்ராவத, பாவனா" என்று ஒன்பது மூர்த்தங்கள் நரசிம்மருக்கு இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்த ஒன்பது மூர்த்தங்களையும் *"நவநரசிம்மர் நமோ நமோ பவநாசி தீரா நமோ நமோ"* என்று ஒரே பாடலில், அமைத்துப் பாடியுள்ளார்.இவற்றுள் ரௌத்ர, ஜ்வாலா நரசிம்மர், யோகானந்த நரசிம்மர், கானுகு மானி நரசிம்மர் என முதல் சரணத்திலும், அடுத்து வரும் சரணங்களில் மட்டபள்ளியிலுள்ள பீபத்ஸ நரசிம்மர் என ரங்கநாத வைபவத்துடன் கூடிய நரசிம்மனைத் துதிக்கிறார்.

திருமங்கையாழ்வார் "சிம்மமே சிம்மத்தை அர்ச்சனை பண்ணும் சிங்கவேள் குன்றம் என்ற அகோபில க்ஷேத்திரம்" என்கிறார். சிம்மங்கள், யானையைக் கொன்று விட்டு அதன் தந்தங்களை நரசிம்மருக்கு சமர்ப்பித்து அர்ச்சனை பண்ணுகின்றனவாம்.

அன்னமய்யாவிற்கு வேதாந்த வித்யாப்யாசம் அகோபில மடத்திலேயே நடந்ததாகக் கூறப்படுகிறது. எனவே அகோபில நரசிம்மர் மீதும், அந்த அவதாரத்தின் மீதும் மிகுந்த ஈடுபாடுடையவராக இருந்தார் என்பதில் சந்தேகமில்லை. திருவேங்கடத்தில் ஸ்ரீதேவியுடன் ஸரஸமாடிக் கொண்டிருக்கும் வேங்கடவனும் நரசிம்மனே. பிரகலாத வரதனாக அகோபலத்தில் அமர்ந்திருக்கும் நரசிம்மனும் திருவேங்கடவனே என்பதில் அன்னமய்யாவிற்கு எள்ளவும் ஐயமில்லை. எந்த அவதார மூர்த்தியைப் பாடினாலும் வேங்கடவனே அவன் என முடிப்பது அன்னமய்யாவின் எழுத்து நடையாகும்.

**–திருமதி இராதா ராமநாதன், திருப்பதி,**
**9393609240**


உக்கரத் தூண்


மாலோல நரசிம்மர்


பாவந நரசிம்மர்

# திருமலையப்பனின் திருவருள்

–திரு.காசிநாதன்,
கும்பகோணம்

**1973** ஆம் வருடம், நான் திருச்சியில் உள்ள பாய்லர் தொழிற்சாலையில் பணிபுரிந்து கொண்டிருந்தேன். எனது மாத வருவாயிலிருந்து ஒரு தொகையினை மலையப்பனுக்கு எடுத்து வைத்து விடுவேன். முதல் முதலாக வேலைக்குச் சேர்ந்த பிறகு குடும்பத்துடன் வேங்கடவனை தரிசிக்க எண்ணி ரயில் பயணத்திற்காக முன் பதிவிற்கான பணம் மற்றும் எனது அலுவலக அடையாள அட்டை முதலியவைகளை எடுத்துக் கொண்டு பேருந்தில் ரயில் நிலையம் சென்று கொண்டிருந் தேன். பேருந்தில் கூட்டம் அதிகமாக இருந்ததால் நான் நின்று கொண்டு பயணிக்க வேண்டியிருந்தது. போகும் வழியில் எனது சட்டை பாக்கெட்டிலிருந்த பணம் மற்றும் எனது அலு வலக அடையாள அட்டை மற்றும் இதர கூப்பன்கள் எல்லா வற்றையும் பிக்பாக்கெட் திருடன் அபகரித்து விட்டான். பேருந்து பயணத்தில் சிறிது நேரம் கழித்து என்னுடைய சட்டை பாக்கெட்டை பார்த்த போது எனக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

எனது பையிலிருந்த பணம் மற்றும் எனது அலுவலக அடையாள அட்டை மற்றும் இதர கூப்பன்கள் களவாடப் பட்டுவிட்டன. நாமோ வேலைக்குச் சேர்ந்த பிறகு முதல் முதலாக குடும்பத்துடன் திருமலையப்பனை தரிசிக்கச் செல்ல ஏற்பாடு செய்யும் பொழுது இப்படி ஒரு சம்பவம் நிகழ்ந்து விட்டதே. திருமலையப்பனே இதென்ன சோதனை, என மன தில் நினைத்துக் கொண்டு பேருந்தில் எனது பக்கத்தில் நின்ற வனை பார்த்த போது, அவன் வேறு ஒருவரிடம் களவாடு வதை கண்டேன். அவன்தான் என் பணத்தை களவாடியவன் என நிச்சயமாக எண்ணி அவன் கையைப் பிடித்து இழுத்து காவல் நிலையத்திற்கு வா, நீதானே எனது பணத்தை களவாடிவிட்டாய் என சட்டையைப் பற்றி இழுத்தேன்.

உடன் பேருந்தில் பயணிக்கும் பயணிகள் பார்த்துக் கொண்டிருந்த வேளையில் அவன் களவாடிய பணத்தை பேருந்தில் கீழே போட்டு விட்டான். பயணித்தவர்கள் இதோ பணத்தை கீழே போட்டு விட்டான் எனச் சொல்லவும், அந்த பணத்தை எடுத்துக் கொண்டு அவனை விட்டு விட்டேன். பிறகு திருமலையப்பன் கருணையே கருணை என எண்ணிக் கொண்டு, ரயில் நிலையம் சென்று முன் பதிவு செய்து கொண்டு வீடு வந்து விட்டேன். பின் குறிப்பிட்ட நாளில் திருச்சியிலிருந்து குடும்பத்துடன் ரயிலில் பயணித்து திருமலை வந்து சேர்ந்தேன். ஸ்வாமியை குடும்பத்துடன் சேவித்ததோடு அல்லாமல் எனது சக அதிகாரி அவரது குடும்பத்தினருக்கும், திருமலையப்பன் தரிசனம் என் மூலமாக மிகச் சிறப்பாக கிடைத் தது. பின்னர் திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார், ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி, ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமியை தரிசித்து மன நிறைவுடன் திருச்சிக்கு வந்து சேர்ந்தோம். அனைத்தும் மலையப்பனின் கருணையே ஆகும்.



ஸ்ரீஆதிசங்கரர் அருளிய கோவிந்தாஷ்டகம்

**அவனே சத்தியம் !**

சத்தியமாகவும், ஞானமாகவும், ஆனந்தமாகவும், நித்தியமாகவும் உள்ளவன் கோவிந்தன். இடைவெளியற்றது (அனாகாசம்), இதயமாகிய குகை வெளியில் உள்ளது (பரமாகாசம்) இவ்விரண்டும் சேர்ந்த கிருஷ்ணன், ஆயர்பாடியில் மாட்டுத் தொழுவத்தில் தன்னொத்த சிறுவர்களுடன் ஓடி விளையாடிக் கொண்டிருக்கிறான்!

**உலகே உருவானவன்!**

மாயையை அடக்கி அதனுள்ளேயே இருப்பவனான கிருஷ்ணன், தானே தனது மாயையில் கற்பித்த பல்வேறு உருவங்களாகவும், உருவமின்றியும், உலகே உருவாகவும் திருத்தமாகத் தெளிவாகத் திகழ்கின்றான்.

ஸ்ரீதேவி பூதேவியின் நாதனும், தனக்கு மேல் ஒரு தலைவன் இல்லாதவனாகவும், பரமானந்த வடிவாகவும் உள்ள கோவிந்தனை வணங்கி வாழ்வில் நலம் பெறுங்கள்! – இவ்வாறு ஆதிசங்கர பகவத் பாதாள் தன்னுடைய “கோவிந்தாஷ்டகத்தை”த் தொடங்குகிறார்.

**ஒளியானவன் !**

உலகங்கள் அனைத்திற்கும் ஒளியூட்டித் தன்னொளியாகத் தானே ஜோதியாக ஒளிவிட்டுப் பிரகாசிப்பவன்! என்றும், உலக இயக்கம் அனைத்திற்கும் பற்றுக் கோடாக இருந்து, அதில் தான் பற்றுக் கொள்ளாது, தானே சாட்சியாகப் பார்த்துக் கொண்டிருப்பவன் என்றும், தேவர்களின் பகைவர்களான அசுரர்களையும், அரக்கர்களையும் அழித்து நிற்பவன்.

**பிறவிப்பிணி தீர்ப்பவன்!**

இந்த உலகத்தின் பெரும்பாரத்தை அழித்து, பிறவிப் பிணியை அழித்து, அறுத்து நிற்பவன் என்றும் பாடுகின்றார் ஸ்ரீஆதிசங்கரர்.

மேலும், நவநீதாஹாரனாக அதாவது வெண்ணெய் உண்பவனாகவும் இருப்பான்! தூய மனதில் தெளிந்து இருப்பவனாவார்.

**பரமானந்த வடிவினன்!**

மாசற்ற உள்ளமுடையோர், தெளிந்து சிறந்த உள்ளமுடையோர், மனமாகிய ஞானவெளியில் ஞானானந்தமாகத் தோன்றுபவன்! மங்கள வடிவினனாக, மாயையைத் தீர்ப்பவனாக, மாறுபாடற்றவனாக இருப்பவன்! அப்படிப்பட்ட பரமானந்த வடிவாகிய கோவிந்தனைப் பாடிப் புகழ்ந்து வணங்குவீர்! என்று பக்தர்களாகிய நமக்கு உணர்த்துகின்றார்.

முனைவர்.செந்திலாண்டவன், சென்னை
94445 82856.





பிறந்த கிருஷ்ணன். அப்படிப்பட்ட கோவிந்தனைப் பாடி வணங்குவோம்! – வணங்குவீர்! என்று உலகோர்க்கு அறிவுறுத்துகின்றார். “கோவிந்தன்” என்ற சொல், “நிர்க்குணப் பிரமம்” அதாவது அருவமான பரம்பொருள் என்றும், சகுனப் பிரம்மம் அதாவது உருவமுடைய பரம்பொருள் என்றும், பரம்பொருளின் ரூப தத்துவங்களை உணர்த்துவதாக ஆதிசங்கரர் கோவிந்தாஷ்டகத்தைப் படைத்துள்ளார்.

**எங்கும் இருப்பவன் (ஸர்வ வியாபி) !**

பரம்பொருளாகிய கிருஷ்ணன் கோபியர்களின் எல்லாக் குழுக்களிலும் இருப்பவனாக – அதாவது இங்கும் இருப்பான்! அங்கும் இருப்பான்! எங்கும் இருப்பான்! என்பதையும் பாடுகிறார்.



**மெய்ப் பொருள் !**

ஏதேதோ பொய்ப் பொருட்களை எல்லாம் மெய்ப் பொருட்கள் என்று ஓடுகிறீர்களே, அழகிய கோவிந்தனான கிருஷ்ணன் அல்லவா மெய்ப்பொருள்! அவன் திருவடியைப் பற்றிக் கொள்வீர்!

“சாந்தம் சிவம் அத்வைதம்” பிரம்மத்திற்குரிய அடைமொழியாக மாண்டூக்ய உபநிஷத் கூறும். அதனையே ஆதிசங்கரர் “சைவம் கேவல சாந்தம்” என்று பாடுகிறார்!

**கோபியர் கொஞ்சும் இரமணன்!**


கோபாலனாகத் தோற்றங்கொண்டவன்! கோபால குலத்தவன்! கோபியர்களுடன் விளையாடி கோவர்த்தனம் தூக்கிப் பசுக்களைக் காத்தவன்! இங்கே கிருஷ்ணனே தலைவன்; உலக உயிர்கள் அனைத்தும் கோபியர்கள்; பசுக்களாகிய – உயிர்கள் கூவியழைத்து அவனோடு ஒன்றி ஜீவித்திருக்கும் அத்வைதத் தன்மையை தன்னுடைய கிருஷ்ண அவதாரத்தில் உணர்த்துகிறான் என்கிறார்.

**ஆயிரம் நாமம் உடையவன்!**

ஆயிரமாயிரம் நாமங்களைக் கொண்டவன். கோவிந்தன் என்ற சிறப்புப் பெயரையும் கொண்டவன்! அவன் அருகில் இருப்பது போல் உயிர்களுக்கு இருந்தாலும், உயிர்களின் புலன்களுக்கும் அறிவுக்கும் எட்டாதவன் அந்த எட்டாவதாய்ப்


**நீலமேகச் சியாமள வண்ணன்!**

கிருஷ்ணன் வெவ்வேறு உணர்வுகளை உடையவனாயினும், வேற்றுமையற்றவன், தெருக்களில் பசுக்களின் குளம்புகள் படிந்து அதனால் எழும் புழுதி படிந்து, மாசற்றவனான மாதவன், கோவிந்தன், நீலமேகச் வண்ணனாக வானுலகும் மண்ணுலகும் காட்சி அளிக்கிறான்.



**ஆனந்த மயமானவன்!**

அறியவொண்ணாத அந்தப்பரப்ரம்மம்



சத்தியப் பொருளாக அறியப்படுபவன். உண்மையான சிரத்தையான சிந்தையுடன் பக்தி செய்வோர்க்கு எளிதில் அடையும் ஆனந்த மயமானவன்!

சிந்தாமணியின் பெருமையையும் உயர்வையும் தன்னகத்தே உடையவன்! அப்படிப்பட்ட பரமானந்தக் கடலான கோவிந்தனை வணங்கி நல்வாழ்வு பெற்று வாழ்வீர்.

### அறிவுக்கும் அறிவானவன்!

கோவிந்தன் அறிவுக்கும் அறிவானவன்! அறிவின் அகத்துள் இருப்பவன்! சோகமும், மோகமும், போகமும் அற்றவன்! பக்தி செய்வார்க்குத் தனது கல்யாணகுணங்களால் போகத்தைத் தருபவன்.


### காந்தன் !

இரும்பினைக் கவரும் காந்தத்தைப் போல, உயிர்களை பசுக்களாகிய – உயிர்களைக் கவர்ந்திழுப்பவன்! காரணங்களுக்கெல்லாம் காரணமாக இருந்து ஒளிர்பவன்! முதலானவனும் அவனே! முதலற்றவனும் அவனே!

### கருமேகச்சுடர் !

கருமேகச் சுடராகிக் காளிந்திப் பொய்கையில் காளிங்கனின் படங்களின் மீது மீண்டும் மீண்டும் அழகு நடனம் புரிந்து மக்களைக் காத்தவன்!

காலமும் அவனே! காலங்களின் செய்கைகளுக்கு அப்பாலிருப்பவனும் அவனே! ஸ்ரீகோவிந்தன் போற்றி வணங்கத்தக்க மாமுனிவர்களின் மனத்தில் போற்றி ஆனந்தமடையும் இணையடிகளை – பொற்பாதங்களை உடையவன்! ஆகவே – புற உலகில் ஆடம்பரமாகச் செய்யப் படும் பூஜைகளைக் காட்டிலும் (பாஷ்ய பூஜை), மனத்தினால் செய்யப் படும் (மானஸ பூஜை) சிறந்தது என்பதையும் ஸ்ரீஆதிசங்கரர் விளக்குகிறார்.



## கோவிந்தாஷ்டகம் படிப்பதால் ஏற்படும் பலன்கள்



ஸ்ரீஆதிசங்கரர், தோத்திரங்களின் வழக்கமான பலச்ருதிகளைப் போல, லௌகீக பலன்களைக் கூறாமல், கோவிந்தனை வணங்கினால் கிடைக்கும் ஞானத்தை – பலனாகக் கூறுகிறார்!

கோவிந்தனிடத்தில் சித்தமாகிய அறிவைக் கொடுத்து,

*கோவிந்தா! அச்சுதா! மாதவா! விஷ்ணோ!*
*கோகுல நாயகா! கிருஷ்ணா!*

கோவிந்தா, அச்சுதா, மாதவா, விஷ்ணோ, கோகுல நாயகா, கிருஷ்ணா என்று பலப்பல முறை கூறி கோவிந்தன்பால் மனம் வைத்து இந்த கோவிந்தாஷ்டகத்தைப் பாராயணம் செய்பவர்கள், கோவிந்தனின் "பாதகமலத் தியானம்" என்னும் அமுதநீரால், பாவமனைத்தும் நீங்கித் தன் மனத்துள் இருக்கும் பரமானந்த அமுதமான அந்த கோவிந்தனை அடைந்து, மாட்சிமைப் படுவார்கள்! என்று அஷ்டகத்தை நிறைவு செய்கிறார். கோவிந்தாஷ்டகம் பொருளறிந்து பாராயணம் செய்வோமாக!

திருமலையில் யானைகள் அதிகம். காரணம் அடர்த்தியான வனப்பகுதி அல்லவா திருமலை. எனவே, யானைகள் நிறைந்து இருப்பதில் அதிசயம் இல்லை. தவிர, "யானை" இருக்குமிடத்தில் "யானைகள்" இருக்கத்தானே செய்யும். விண்ணுக்கும் மண்ணுக்கும் வைப்பான "வேங்கடவன்" என்கிற யானை நின்று அருள் புரியும் இடத்தில் யானைகள் இல்லாமல் இருக்குமா?

பகவானை யானை என்றே திருமங்கை ஆழ்வார் பாடுகிறார்.

*பொன்னானாய் பொழிலேழும் காவல் பூண்ட*
*புகழானாய் இகழ்வாய தொண்ட னேன் நான்*
*என்னானாய்? என்னானாய்? என்னல் அல்லால்*
*என்னறிவ னேழையேன் உலக மேத்தும்*
*தென்னானாய் வடவானாய் குடபா லானாய்*
*குணபால மதயானாய் இமையோர்க் கென்றும்*
*முன்னானாய் பின்னானார் வணங்கும் சோதி.*
*திருமூழிக் களத்தானாய் முதலா னாயே*

என்ற பாசுரம் முழுக்க பகவான் யானை தான்.

அந்த கம்பீரம் அப்படிப் பாட வைக்கிறது.

யானைக்கும் பகவானுக்கும் உள்ள ஒற்றுமை அபாரமானது. யானை பாகனுக்குக் கட்டுப்பட்டது. பகவான் பக்திக்குக் கட்டுப்பட்டவன். யானை தன்னை கட்ட தானே சங்கிலி எடுத்துக் கொடுக்கும். பகவானும் தன்னை அடைய தானே உபாயமாக நிற்பான். யானை கம்பீரம். ஸ்வந்திரமான யானை பாகன் சொல்லுக்குத் தகுந்தபடி நடக்கும். பகவான் ஆசார்யனுக்கும் பூஜகர்களுக்கும் இஷ்டப்படி நடப்பான். இப்படி பல விஷயங்களைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

சரி, விஷயத்துக்கு வருவோம். திருமலையில் உள்ள யானைகளுக்கும் எம்பெருமானை வழிபாடு செய்வது என்றால் மிகவும் விருப்பம். இது கஜேந்திர மோட்சம் கதையிலிருந்து நமக்குத் தெரிகிறது.

சாகும் நிலையில் இருந்த கஜேந்திரன் தான் பறித்த தாமரை மலரை பரந்தாமன் திருவடிகளில் வைத்து விட்டுத்தான் சாக வேண்டும் என்று நினைத்தான். எனவே, பகவானுக்கு யானைகளைப் பிடிக்கும்.

அதனால் தான் பிரம்மோத்ஸவத்தின் ஒரு நாள் யானை வாகனம் ஏறி வீதி உலா வருகின்றான்.

# திருமலையில் மத யானைகள் செய்யும் மகத்தான வழிபாடு

*-பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.*



திருமலையில் உள்ள யானைகளுக்கு நித்திய வழக்கம் ஒன்று உண்டு. பகவானுக்கு ஆகம முறைப்படி திருவாராதனம் செய்யும். அது எப்படி திருவாராதனம் செய்யும் என்று கேட்கிறீர்களா? யானைக்கு மதநீர் ஒழுகும்.

*தொடர் சங்கிலிகை சலார் பிலார் என்னத்*
*தூங்கு பொன்மணி ஒலிப்பப்*
*படு மும்மதப் புனல் சோர வாரணம்*
*பைய நின்று ஊர்வதுபோல்*
*உடன் கூடிக் கிண்கிணி ஆரவாரிப்ப*
*உடை மணி பறை கறங்க*
*தடந்தாளிணை கொண்டு*
*சார்ங்கபாணி தளர்நடை நடவானோ*

யானைகள் மண்டையில் நின்றும், கபோலங்களில் நின்றும், வாயிலே புகுகின்ற மத ஜலத்தாலே, வாய் கொப்பளித்து ஆசமனம் பண்ணுமாம்.

மேலிருந்து கீழ்வரையில் அருவி போலே வந்து பெருகுகிற மத ஜலத்தாலே கால் கழுவி, கால்களை சுத்தி செய்து கொண்டு, வழிபாட்டுக்குரிய நிலைக்கு உடலை சுத்தம் செய்து கொள்ளுமாம். திருக்கை விளக்குதல், திருவாய் கொப்பளித்தல், திருத்தாள் விளக்குதல், பூஜைக்குரிய கருவி கரணங்களை சுத்தி செய்து கொள்ளுதல் என இத்தனையும் செய்யுமாம்.

திருமஞ்சனம் மற்றும் ஆராதனையின் போது இதே செயல்களை ஆகம விதிகளின் பிரகாரம் நாம் பகவானுக்கும் செய்கிறோம் அல்லவா? மனிதர்களுக்கு வகுக்கப்பட்ட ஆராதனை ஆகம விதிகளை, திருமலையில் உள்ள யானைகளும் முறையோடு பின்பற்றுகின்றன.





இந்த ஆராதனை விதிகளை, யானைகளே பின்பற்றும்போது மனிதர்கள் பின்பற்றத் தவறலாமா? என்கின்ற தொனியும் இதில் மறைந்து கிடக்கிறது. இப்போது பூஜைக்கு வேண்டிய தூய்மையை யானைகள் பெற்று விட்டன.

அடுத்து பூஜைக்குத் தேவை என்ன? அர்ச்சனை செய்வதற்கு வேண்டிய மலர்கள் முதல் தேவை. நிவேதனம் செய்வதற்கு ஏற்ற சுவையான பொருள் அடுத்த தேவை.

சரி, இதற்கு எங்கே போவது? எங்கேயும் போக வேண்டாம். திருமலையில் கிடைக்காத புஷ்பங்களா?

*எந்தை தந்தை தந்தை தந்தைக்கும்*
*முந்தை வானவர் வானவர் கோனொடும்*
*சிந்துபூ மகிழும் திருவேங் கடத்து*
*அந்த மில்புகழ்க் காரெழில் அண்ணலே.*

என்பது நம்மாழ்வார் பாசுரமல்லவா!

இராமாநுஜர் இதை பாடுகின்ற போது "ஐயோ திருமலையில் கொட்டி வீணாகும் மலர்களை எடுத்து ஆராதனை செய்ய யாரும் இல்லையா?" என்று கேட்க, அப்பொழுது அனந்தாழ்வார், "சுவாமி, தேவரீர் உத்தரவிட்டால், நான் சென்று அங்கே நந்தவனம் அமைத்து வேங்கடவனுக்கு புஷ்ப கைங்கர்யம் செய்கின்றேன் என்று புறப்பட்டார். புஷ்ப மண்டபம் திருமலை. எனவே எல்லா இடங்களிலும் வண்ண மலர்கள் தான். மணம் மிக்க வாசனையுள்ள பூக்களை தனது துதிக்கையால் யானைகள் பறிக்கின்றன.

"அது என்ன துதிக்கை?" என்றால் துதிப்பதற்கு என்றே ஏற்பட்ட கை துதிக்கை.



*வாய் அவனை அல்லது வாழ்த்தாது; கை*
*உலகம்*
*தாயவனை அல்லது தாம் தொழா: பேய் முலை*
*நஞ்சு*
*ஊண் ஆக உண்டான் உருவொடு பேர்*
*அல்லால்*
*காணா கண், கேளா செவி என்பதும் ஆழ்வார்*
*பாசுரம் தானே.*

மலராத புஷ்பங்களையும், வாசனை இல்லாத பூக்களையும் பூஜைக்கு எடுத்துச் செல்வது சரியாக இருக்காது. என்னென்ன பூக்கள் முக்கியம் என்பதை அறிய ஒரு பாசுரம் உண்டு.

*செண்பக மல்லிகையோடு செங்கழுநீர்*
*இருவாட்சி*
*எண் பகர் பூவும் கொணர்ந்தேன் இன்று*
*இவை சூட்ட வா என்று*
*மண் பகர் கொண்டானை ஆய்ச்சி மகிழ்ந்து*
*உரை செய்த இம் மாலை*
*பண் பகர் வில்லிபுத்தூர்க் கோன் பட்டர்பிரான்*
*பத்தே.*

புஷ்பங்களை தயார் செய்தாயிற்று. அடுத்து நிவேதனம். அதற்கு என்ன செய்வது? தேன் பூஜைக்கு முக்கியம். “மது வர்க்கம்” என்று பெயர். தேன் திருமலையில் ஏராளமாகக் கிடைக்கிறது. யானைகள் காலைக் கடன்களை முடித்து, உடல் தூய்மை செய்து கொண்டு, மனத்தூய்மையோடு கிடைக்கக்கூடிய பூஜைக்கு உகந்த மலர்களையும், பூஜைக்கு உகந்த தேனையும் சேகரித்துக் கொண்டு செல்கின்றன.இனி என்ன, வழிபட வேண்டியதுதான். எதிரே மிடுக்காக வேங்கடவன் நிற்கிறான். அவன் திருவடியில் பூக்களை சூட்டியது யானை, நிவேதனமாகப் படைத்தது தேனை. ஆஹா! எப்பேர்ப்பட்ட வழிபாடு இது! ரிஷிகள், முனிவர்களிடமிருந்து இந்த யானைகள் கற்றுக்கொண்ட வழிபாடா? அல்லது இந்த யானைகளிடம் இருந்து ரிஷிகளும் முனிவர்களும் வழிபாட்டை கற்றுக் கொண்டார்களா?

எப்படியோ திருமலையில் அற்புதமான வழிபாடுகள் செய்து கொண்டிருக்கும் காட்சியை ஆழ்வார் நமக்கு கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறார் அந்த பாட்டு தான் இது.

*புகுமதத்தால் வாய்பூசிக் கீழ்தாழ்ந்து அருவி*
*உகுமதத்தால் கால்கழுவிக் கையால்,*
*மிகுமதத்தேன்*
*விண்டமலர் கொண்டு விறல்வேங் கடவனையே*
*கண்டு வணங்கும் களிறு.*

தேன் – மிகுந்த மதத்தை யுண்டுபண்ணக் கூடிய தேனை, விண்ட – மலர்ந்ததுமானமலர், கொண்டு விறல் வேங்கடவனையே – பெருமிடுக்கனான திருமலையப்பனையே, கண்டு வணங்கும் – யானை சேவித்து வணங்குகின்றது.

திருமலையில் மதயானைகள் தாமரைப் பூக்களைப் பறித்து, அப்பன் திருவடிகளில் சமர்ப்பித்து வணங்குகிறபடியை, ஒரு சத்காரம் பொலியப் பேசுகிறார் ஆழ்வார்.


எம்பெருமான் சந்நிதியில் தொண்டு செய்யப் போமவர்கள் வாயைக் கொப்பளித்துக் கைகால்களை சுத்தி செய்து கொண்டு, புஷ்பங்களை எடுத்துக் கொண்டு போவது வழக்கம்.

இவ்வாசாரம் சாஸ்த்ரவச்யர்களான மானிட சாதியர்க்கு மாத்திரமல்ல, திருமலையிலுள்ள அஃறிணைப் பொருள்கட்கும் இவ்வாசாரம் கோல் விழுக்காட்டிலே அமைந்திருக்கின்றது என்கிறார்.

மத்தகம், கன்னங்கள் ஆகிய இடங்களிலிருந்து பெருகி வாயிலே புகுகின்ற மத ஜலத்தினால் வாய் கொப்பளித்து ஆசமனம் பண்ணினது போலும். அருவிபோலே காலளவும் பெருகுகின்ற மதஜலத்தினால் காலைக் கழுவினது போலும். விறல் வேங்கடவன் – இங்ஙனே திருமலையிலுள்ள திர்யக் ஜந்துக்களும் தன்னை வணங்குமாறு ஜ்ஞானத்தைக் கொடுக்க சக்தனான திருவேங்கடமுடையான் என்ப.

பாசுரம் படிப்போம்...

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 70



**இடமிருந்து வலம்**

1. நரசிம்ம அவதாரத்திற்குப் பிறகு திருமால் லட்சுமி தேவியைத் தேடி வந்து சேர்ந்த தலம்...(8)
5. அனுமன்சாலிசாவை எழுதிய மகான்.....(6)
10. ஜடாயுவின் தம்பி.....(4)
19. பிதுர் தோஷத்தில் இருந்து விடுபட எள்ளினால் செய்யப்படும் யாகம்....(5)
22. பூமிதேவியின் அம்சமாகப் பிறந்தவர் .....(4)

**வலமிருந்து இடம்**

4. அசுர குலத்தில் அவதரித்த விஷ்ணு பக்தன்....(6)
7. குமார சம்பவம் என்னும் நூலை எழுதியவர்....(5)
16. பிரதோஷம் அன்று அபிஷேகம் நடக்கும் நரசிம்மர் தலம்.......(10)
18. சதுர்புஜ யோக ஆஞ்சநேயர் உள்ள தலம்.....(5)
21. திருப்பாணாழ்வாரின் அவதார தலம்....(5)

தொகுப்பு :
திரு. எஸ். ராஜகுமார், சென்னை,
81249 30259

புதிருக்கு விடை அறிய
45ம் பக்கம்
பார்க்கவும்...

**மேலிருந்து கீழ்**

2. ஏழுமலையானுக்கு தொண்டு செய்தவர்.....(7).
3. ஆயர்பாடி மக்களின் தலைவர்....(6)
6. சாவித்திரியின் கணவன்.....(6)
13. பித்ரு தோஷம் உள்ளவர்கள் .....(5) சேவையை தரிசித்து வந்தால் தோஷம் நீங்கும்

**கீழிருந்து மேல்**

8. விதை இல்லாமல் முளைக்கும் தாவரம்.....(4)
9. மகாவிஷ்ணு இராமனாக அவதாரம் செய்த போது சங்கு இவராக அவதரித்தார்.....(4)
10. பகவத் கீதையை திருதராஷ்டிரனுக்குக் கூறியவர்......(5)
11. கருடன் மகாவிஷ்ணுவின் இந்த அம்சம்.....(6)
12. பெருமானின் ஐந்து நிலைகளில் ஒன்று.....(3)
14. விஷ்ணுவின் அவதாரங்களில் லீலைகள் பல நிறைந்த அவதாரம்....(8)
15. விஷ்ணு புராணத்தை இயற்றியவர்.....(8)
17. தன்வந்திரி கையில் மாம்பூ உடன் கேரளாவில் உள்ள தலம்......(5)
19. வைத்திய வீரராகவ பெருமான் குடி கொண்டிருக்கும் தலம்.....(6)
20. திருப்பதி ஸ்ரீநிவாசரின் வளர்ப்புத்தாய்......(6)

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

# தாஸ சாகித்யத்தில் திருவேங்கடவன்

ஸ்ரீநிவாசனின் கண்கள் விரிந்த மலரிதழ்கள். பக்தர்களின் மேல் அவரின் பார்வை விழுந்தாலே போதும், அஷ்ட ஐச்வர்யங்களும் கிட்டும். அவை மங்களகரமானவை. வெற்றியை உண்டாக்குபவை. ஸ்ரீமத்வாச்சார்யார் தம் துவாதச ஸ்தோத்திரத்தில் இவ்வாறு கூறுகிறார்.

பக்தர்களை அருளுடன் காண்பவை. ஸ்வாமியை பக்தியுடன் துதிப்பவர்களுக்கு வேண்டும் வரங்களைத் தருபவை. பிரகலாதனின் வேண்டுகோளிற்கிணங்க தூணிலிருந்து வெளிவந்து அனலை கக்கியவை.

சகல விருக்ஷ ஜாதிகளுக்கு துளசியை ஸ்ருஷ்டித்து கொடுத்தவை, ஆனந்தமாகப் பிரகாசிப்பவை, கமல தளம் போன்றவை, கஜராஜனின் மேல் திருஷ்டியை வைத்தவை, விசாலமானவை, அஷ்ட சௌபாக்கியத்தை அருளி பக்தர்களை மகிழ்விக்கக் கூடியவை, நாரதர் முதலிய முனிவர்களுக்கு மகிமையைக் கொடுப்பவை, அனைத்து உயிர்களையும் காப்பாற்றுபவை, கண் இமைக்காமல் எப்போதும் அனைவரையும் காண்பவை, தேவர்களின் சேவைகளுக்கு தகுந்த வரத்தைத் தருபவை ஸ்ரீநிவாசனின் கண்கள். ஆயிரம் படைகளுடன், இரண்டாயிரம் நாக்குகளுடன் கூடிய ஆதிசேஷனால் கூட இந்த ஸ்ரீநிவாசனின் வைபவத்தை வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது. சமுத்திரத்தின் மேல் தோன்றும் அலைகளையும், ஆகாயத்தில் தோன்றும் நட்சத்திரங்களையும் கணிப்பது எவ்வளவு கடினமோ அதே போன்று ஸ்வாமியை வர்ணிப்பது மிகவும் கடினம். ஸ்ரீநிவாசர் பக்தப்பிரியன், யாசகர்களுக்கு காமதேனு, கற்பக மரம், ஒளி மங்கள சிந்தாமணி . பக்தி ஞான வைராக்கிய வைபவங்களை உடையவன். இவரை பலமுறை விஜயதாசர் புகழ்ந்து பாடியுள்ளார். ஆனாலும் அவருக்கு கீர்த்தனைகளால் வர்ணிக்கும் தாகம் தீர வில்லை. *"கிரிராஜ சித்த உதார"* என்ற ஐந்து சரணங்களில் ஸ்வாமியின் வைபவம், க்ஷேத்திர வைபவம் ஆகியவற்றைப் பற்றி விவரித்துள்ளார்.

*"கிரிராஜ சித்த உதாரஜீயா! நாநின்ன பதக்கை..."*

கிரிராஜா! உம் மனம் விசாலமானது. உம் திருவடிகளை வணங்குகிறேன். உம்மை நம்பியவரைக் காத்திருக்கச் செய்வது நியாயமா? விரைவில் என் கையைப் பிடித்துக் கொண்டு கருணைக்காட்டு! ஆதித்ய புராணத்தில் "கடி" என்றால் ஐச்வர்யம் என்று பொருள். அமிர்த ஐச்வர்யத்தினை வழங்கும் திருவேங்கடவன் என்று சொல்லப்பட்டுள்ளது.

கருட புராணத்தில் முழுமையான ஞானம், ஆனந்தம் மற்றும் ஸர்வஸ்வாமியான திருவேங்கடவனே முக்தியை வழங்குபவர். அசுரர்களை அழித்த வீரனும் திருவேங்கடவனே என்று கூறுகின்றார். பவிஷ்யோத்தர புராணத்தில் "வேம்" என்றால் பாவங்கள் என்றும், "கடி" என்றால் அழித்தல் என்றும் பொருள். சகல பாவங்களை அழிப்பவர் என்று பொருள். வேங்கடவனின்



**வாசகர்களே...**

**ஏழு மலைகள் நிறைந்த திருமலையில் நித்திய வாசம் செய்யும் கலியுக கண்கண்ட தெய்வமான திருவேங்கடவன் தங்களுடைய வாழ்வில் நிகழ்த்திய திருவிளையாடல்கள் அதாவது ஸ்வாமியின் திருலீலைகளை ஸப்தகிரி பத்திரிகையில் வெளியிடுவதற்கு ஏதுவாக அதை எழுதி ஸப்தகிரி அலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

*எங்கள் முகவரி :*


**பிரதான ஆசிரியர்,**
**“ஸப்தகிரி”, தி.தி.தே.,**
**கபிலத்தீர்த்தம் சாலை,**
**திருப்பதி - 517 507.**
**0877- 2264543, 2264359.**


திருமந்திரங்கள் துன்பங்களை அழித்து செல்வங்களை அருள்பவை.

திருவேங்கடவனின் மந்திரங்களைப் பற்றி 5 சரணங்களில் இவ்வாறு தெரியப்படுத்தியுள்ளார்.

பலராமனின் பிரம்மஹத்யத்தை நீக்கியவர், பலிசக்ரவர்த்தியின் கனகாபஹரண பாவங்களை நீக்கியவர், பலவானான வ்ருஷபாசுரனை அழித்தவர், கலியுகத்தில் இதுவே பக்தர்களுக்கு சிறந்த மந்திரமாகும்.

தண்டனை தருவாராம். மனதால் பாவங்கள் செய்தால் உடலிற்கு சில தண்டனைகள் தருவாராம் என்று கூறுகிறார்.

இவரை நம்பியவர்களுக்கு எவ்வித பயமும் இன்னலும் இராது. கடவுளை வணங்குபவர்க்கு எவ்வித கஷ்டங்களும் வராமல் தடுப்பாராம். தன்னை நம்பிய பக்தர்களுக்காக வைகுண்டத்தை விடுத்து இந்த சேஷாத்ரியின் மேல் எழுந்தருளியுள்ளார். விஷ்ணு நாம சங்கீர்த்தனைகள் சகல பாவங்களை அழிக்கும். கலியுக தெய்வமான திருவேங்கடவனின் திருநாமங்களை படித்தாலே போதும். ஸ்வாமியை வேண்டிக் கொள்ளும் வகையில் தீர்த்த யாத்திரை, தான தர்மங்களின் விரதங்கள், தவம் அர்ச்சனை போன்றவை செய்வதால் வரும் புண்ணியத்தை விட ஸ்வாமியை மனதில் நினைத்தாலே போதும் அனைத்து செல்வங்களும் கிட்டும் என்று புராணங்கள் செப்புகின்றன. திருவேங்கடவனின் நாமம் ஒன்றே போதும் சகல பாவங்கள் தீரும்.

இவ்வாறு பிரம்மோத்ஸவத்தில் ஸ்ரீநிவாசனின் வைபவங்களைப் பற்றியும், அனைத்து வாகன சேவைகளைப் பற்றியும் மேலும் சில கீர்த்தனைகளில் வர்ணித்துள்ளார்.

வறுமை உடைய முதியவரான பிராம்மணருக்கு செல்வங்களை வழங்குபவை. மனதை தூய்மையாக்குவது சிரத்தையை அளித்து காப்பாற்றும் சுலபமான மந்திரம்.சந்திரனின் குருத்ரோஹ பாவங்களை அழித்தவை. ஷண்முகனுக்கு அனுக்கிரகத்தை அளிப்பவை.

ஸ்மரித்தாலே போதும் கண் முன் நிற்பவை. அரசர்களுக்கு நன்மையை அளிப்பவை வேங்கடேஷ மந்திரம்.

இந்த மந்திரமே அனுபவங்களை உடையவருக்கு பதவியை அருள்பவை. இந்த மந்திரமே யானை முதலிய பக்தர்களைக் காப்பாற்றியவை.

ப்ராண பூர்வமாக (ஓம்காரத்துடன்) இம் மந்திரத்தை ஜபிப்பவர் முக்தியை அடைவர். (பணி சைல) பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கும் நிலையமான விஜய விட்டலின் இந்த மந்திரங்களை அறிந்து கொண்டு ஜபித்தால் அவர்களின் உயிரைக் காக்கும் மந்திரம் இது.

விஜயதாசர் ஸ்ரீநிவாசனின் ஸ்வபாவத்தை வர்ணித்து மங்கள கீதத்தைப் பாடினார்.


*“ஜயமங்களம் நித்ய சுபமங்களம்”*

அரிசியை நைவேத்தியமாக செய்து பித்தளை பாத்திரத்தில் படைப்பவனுக்கு, உண்டியலில் இருந்து பணம் எடுப்பவனுக்கு என்னிடம் பணம் இல்லை என்று கூறுபவனுக்கு, அனைத்தையும் பறிப்பவனுக்கு ஜயமங்களம் சுபமங்களம்.


தெலுங்கு மூலம் : திரு. எஸ். நாகராஜாசார்யுலு
தமிழாக்கம் : திரு. வி. வேங்கடரமணா


*முற்றும்...*

11



ஸ்ரீராமனின் திருக்கல்யாண குணங்கள்

# ஏக ப்ரியதர்சனன்

*எப்பொழுதும் பிரியமாகக் காணத்தக்கவன்; மேலும் அனைவரையும் பிரியமாகக் காண்பவன்.*

**- திரு. உ.வே. வேளுக்குடி கிருஷ்ணன் ஸ்வாமி, சென்னை.**

**கருத்து:**

**இராமனை நாம் தரிசித்தால் பயனுண்டு. அதைவிட இராமன் நம்மை கடாக்ஷித்தால் பெரும் பயனுண்டு**

### ஏன் இராமன் என்று பெயர் வைத்தனர்?

தசரதன் புத்ரகாமேஷ்டி யாகம் செய்து நான்கு புதல்வர்களைப் பெற்றான். தொட்டிலிலிருந்த நால்வருக்கும் வசிஷ்டர் பெயர் சூட்ட வந்தபோது, முதல் முறையாக இராமனைக் கண்டார். குழந்தையின் திருமேனி அழகு அவரை இராமன் என்று பெயர் வைக்கத் தூண்டியது. "ரமயதி இதி ராம:" என்னும் விளக்கத்தின்படி காண்பவரின் மனதுக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பவன் இராமன். வசிஷ்டர் மனமுவந்து உலகுக்கு மூலமந்திரமாயும், இம்மைக்கு மருந்தாயும் உள்ள ராம நாமத்தைச் சூட்டினார். ஸ்ரீமஹாலக்ஷ்மியின் பேரருளை (கைங்கர்யச் செல்வத்தை) பெறப்போகிறவனை லக்ஷ்மணன் என்றும், ராஜ்யத்தை பரிக்கவிருப்பவனை (தாங்கவிருப்பவனை) பரதன் என்றும், சத்ருக்களை வெல்லவிருப்பவனை சத்ருக்னன் என்றும் அழைத்தார்.

"ராம" என்று கூறினால் நாவுக்குத் தூய்மை; இராமனைக் கண்டால் கண்ணுக்குக் குளிர்ச்சி!

### இராமனைக் கண்டால் முதியவனும் இளைஞனாகலாம்!

இராமன் காட்டுக்குப் போக வேண்டும் என்ற கைகேயியின் பிடிவாதத்தைக் கண்ட தசரதன் அவளிடம் மன்றாடினார். "தேவி! இராமன் பிறப்பதற்கு முன் எனக்கு வயது அறுபதினாயிரம். அவன் பிறந்து நடக்கத் தொடங்கியவுடன் அவனுடைய முன்னழகைப் பார்த்து என் வயது ஆறாயிரமாகக் குறைந்தது. என்னிடமிருந்து அவன் விளையாட்டாக ஓடிப் போகும் போது அவன் பின் அழகைப் பார்த்து என் வயது அறுநூறாகக் குறைந்தது.

இப்படி அவனை முன்னும் பின்னுமாகப் பார்த்துப் பார்த்து இப்போது இருபத்தைந்து வயது இளைஞனாக உள்ளேன். எந்த மனைவியாவது தன் கணவனுக்கு இளமை வேண்டாம் என்று நினைப்பாளா? ஆகவே, இராமனை என்னிடமிருந்து

பிரித்து என் இளமை அனுபவத்தைக் கெடுக்காதே” என்றார்.

இராமனின் அழகும் இளமையும் தளர்ச்சியைப் போக்கி முதியவனையும் உத்சாகம் அடைவிப்பதன்றோ!

### இராமன் பார்த்தான்; சபரி புறப்பட்டாள் !

மதங்க முனிவரின் சிஷ்யையான சபரி தன் குருவின் ஆணைப்படி இராமனும் லக்ஷ்மணனும் தன் ஆச்ரமம் தேடி வரும் நாளை எதிர்பார்த்திருந்தாள். இருவரும் வந்தபோது அவர்களுக்கு இனிதான பழங்களை சமர்ப்பித்தாள். அன்போடு அவற்றை ஏற்றுக் கொண்ட இராமன், தன் தாமரைக் கண்களால் அவளைக்குளிர நோக்கினான். உடனே தன் பாபங்கள் நீங்கப்பெற்ற சபரி, இராமனிடம் விடை பெற்றுக் கொண்டு முக்தியடைந்தாள். இராமனின் குளிர்ந்த பார்வை பாபங்களைப் போக்கி நம்மைத் தூய்மையாக்கும்.

### அரக்கியையும் மயக்கிய அழகு !

சீதையும் இராமனும் பஞ்சவடியில் இருக்கும்போது இராவணனின் தங்கையான சூர்ப்பணகை



இராமனைக் கண்டு காம வயப்பட்டுத் தன்னை ஏற்றுக் கொள்ள வேண்டினாள். ஒருவனுக்கு ஒருத்தி எனும் உறுதி உடைய இராமன் அவளை மறுத்தான். கோபம் கொண்ட அரக்கி சீதையைக் கொல்லப் பார்த்தாள்.

உடனே இலக்குவன் கத்தியால் அவள் காதையும் மூக்கையும் அறுத்து வீசினான். மூக்கு விழுந்த இடமே இன்று மஹாராஷ்டிரத்தில் கோதாவரிக் கரையில் இருக்கும் நாஸிக் எனும் ஊர். மூக்கறுக்கப்பட்ட சூர்ப்பணகை தன் மற்ற அண்ணன்மார்களான கரன், தூஷணன் ஆகியோரிடம் முறையிட ஓடினாள்.

தன் மூக்கறுத்தவனை ஏச வேண்டிய அவள், அதை மறந்து இராமனின் இளமை, திருமேனி அழகு, மென்மைப் பண்பு, வலிமை, தாமரைக் கண்கள், மான்தோல் மரவுரி அணிந்த ஒப்பனை அழகு ஆகியவற்றைப் புகழ்ந்தாள். அரக்கியே மயங்கிய அந்த அழகில் நாமும் ஈடுபட்டால் மனிதனாகப் பிறந்ததன் பயனை அடைவோம்.

*வளரும்...*

### அக்ஷய திருதியை



1. கிருஷ்ண பகவான் பாண்டவர்களுக்கு அக்ஷய பாத்திரம் வழங்கிய நாள்.
2. பகீரதன் ஆகாய கங்கையை இந்த பூமிக்கு கொண்டு வந்த நாள்.
3. காசியில், மஹாதேவர் காசி அன்னபூரணி தேவியிடம் பிக்ஷாண்டனார் கோலம் பூண்டு பிக்ஷை வாங்கிய நாளாகும்..
4. மஹாவிஷ்ணுவின் தசாவதாரத்தில் பரசுராமர் அவதரித்த தினம்.
5. குசேலர் ஸ்ரீகிருஷ்ணருக்கு அவலை கொடுத்து குசேலருக்கு சுபிக்ஷம் உண்டான நாளாகும்.
6. குபேரன், மஹாலட்சுமியை பூஜித்து பல செல்வங்களைப் பெற்ற நாளாகும்.

மஹாவிஷ்ணுவிற்கு சந்தன அலங்காரம் செய்தால் வைகுண்ட ப்ராப்த்தி கிட்டும். வஸ்திர தானம், அன்ன தானம், பொன்தானம் என்று எந்தவித தானங்கள் கொடுத்தலும் அது பன்மடங்கு நன்மை அளிக்கும்.

# வக்கிரமான கிரகங்கள் கொடுக்கும் பலன்கள்

முனைவர் ஆ.முத்து கிருஷ்ண ஆச்சாரி,
சென்னை,
9444392595

வக்கிரம் என்றால் பின்னோக்கும் நிலை ஆகும். ராகு கேதுக்கள் எப்போதும் பின்னோக்கியேச் செல்லும். சூரியன் சந்திரன் எப்போதும் முன்னோக்கியேச் செல்லும். மற்ற கிரகங்களான செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி ஆகியவை வக்கிர நிலை அடையும். சூரியனை நோக்கி ஒரு குறிப்பிட்ட பாகையில் நெருங்கும்போது மேற்கண்ட கிரகங்கள் வக்கிர நிலையை அடையும். அதாவது பூமியை நெருங்கும் சமயம் கிரகம் வக்கிர நிலையை அடையும். வக்கிர நிலை பெறும் கிரகம் உச்சபட்ச பலனைத் தரும்.

சூரியனை ஒட்டியே செல்லும் புதன், சுக்கிரன் ஒரு குறிப்பிட்ட தூரத்தை விட அதிகமாகச் சென்று வக்கிரம் பெற்று சூரியனை நெருங்கும்போது வக்ரநிவர்த்தி அடைகின்றது. அதுபோல சூரியனுக்கு 9ஆம் வீட்டில் குரு, செவ்வாய், சனி வருகின்றபோது வக்கிரம் பெற்று, சூரியன் இக்கிரகங்களின் ஒன்பதாம் வீட்டிற்கு வரும்போது வக்கிர நிவர்த்தி அடைகிறது. குறிப்பாக ஒரு கிரகம் வக்கிரம் பெற்றால் என்ன பலனைத் தருகிறது என்று ஆராய்கிற போது பல்வேறு உண்மைகள் வெளிப்படுகின்றன.

குறிப்பாக உச்சம் பெற்ற கிரகம் வக்கிரம் பெற்றால் நீசபலனைத் தருகிறது. அதுபோல நீசம் பெற்ற கிரகம் வக்கிரம் பெற்றால் நீச பலனுக்குப் பதில் நற்பலன்களைத் தருகிறது. சரி, மற்ற ஸ்தானங்களில் இருக்கும்போது என்ன பலன்களை ஏற்படுத்துகிறது என்று பார்க்கின்ற போது சொந்த வீட்டில் ஆட்சிப் பெற்ற கிரகம் வக்கிரம் பெற்றால் ஒரு கிரகம் பலவீனமடைந்திருந்தால் என்ன பலனைத் தருமோ, அதாவது நீசம் பெற்றால் என்ன பலனைத் தருமோ அது போன்ற பலனையேத் தருகின்றது.

ஆட்சி உச்ச ஸ்தானத்தைத் தவிர மற்ற ஸ்தானங்களில் வக்கிரம் பெறுகின்ற கிரகங்கள் பலமாக இருந்தால் என்ன பலனைத் தருமோ அதுபோல நற்பலன்களைத் தரும். அதுவும் நட்பு வீட்டில் அமையப் பெற்ற கிரகம் வக்கிரம் பெற்றிருந்தால் அக்கிரகம் ஆட்சிப் பெற்றால் என்ன பலனைத் தரும். அதற்கு சமமான நற்பலனை உண்டாக்கும். பொதுவாக கிரகங்கள் பரிவர்த்தனைப் பெற்று அமையப்பெற்றால் அக்கிரகங்கள் சொந்த வீட்டில் அமையப்பெற்றால் என்ன பலனைத் தருமோ அதுபோல பலனைத் தரும்.

கீழ்க்கண்ட கருத்துக்கள் வக்கிர கிரகங்களுடன் சேர்ந்த–பார்வையிட– வேதை நட்சத்திரத்தில் அமர்ந்த கிரகங்ளினால் பலன்கள் குறைவதோ அதிகரிப்பதோ நடக்கும். ஆகையால் தெளிவாக கூர்ந்து கவனித்து பலன் உரைப்பது நல்லது.

1. லக்னாதிபதி வக்கிரம் அடைந்தால் , வக்கிரம் பெற்று தீமையான பலனை செய்தால் ஜாதகர் தனது வாழ்க்கையை தானே கெடுத்துக்கொள்ளும் நிலை ஏற்படும். நேர்மையான வழியைவிட்டு , குறுக்கு வழியை தானே தேர்ந்தெடுக்கும் நிலைக்குத் தள்ளப்படுவார். தனிமையை விரும்பும் சூழ்நிலைக்குத்

தள்ளப்படுவார். மனதில் உள்ளதை வெளியே சொல்லவும் தெரியாது.

இதனால் மன அழுத்தத்திற்கு ஆளாகும் சூழ்நிலை வரும். எதையும் போராடிப் பெறும் நிலை ஏற்படும். இந்த சூழலில் வளர்வது சிறப்பாக இருக்காது. சிந்தனை செய்யாமல் செயல்களை செய்துவிட்டு பிறகு வருந்தும் தன்மை ஏற்படும். நல்ல நண்பர்கள் அமைய மாட்டார்கள். வக்கிரம் பெற்று நன்மை யான பலனை செய்தால் ஜாதகருக்கு நிகர் ஜாதகர் மட்டுமே. ஜாதகரை பகைத்துக் கொள்பவர்களின் சொத்து இவருக்கு வந்துசேரும். எந்த காரி யத்தைத் தொட்டாலும் பொன்னாகும். வெற்றிமேல் வெற்றி வந்து சேரும்.

விரைவான முன்னேற்றம், ரகசிய வழிகளில் பணம் வருவது, திடீர் அதிர்ஷ்டம் போன்றவை ஜாதகருக்கு ஏற்படும். சொத்து சுக சேர்க்கை குறுகிய காலத்தில் அடைந்து விடும் தன்மை ஜாதகருக்கு ஏற்படும். ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியர் அமைவர், உடல்நிலை மிகவும் சிறப்பாக இருக்கும், பல நல்ல பலன்களே ஜாதகருக்கு நடக்கும். பொதுவாக லக்னாதிபதி வக்கிரம் பெற்றால் அந்த ஜாதகரின் மனது கல் மனது என்று தெளிவாக சொல்லிவிடமுடியும். அது நன்மையாகவும் இருக்கலாம், தீமை யாகவும் இருக்கலாம். சுய ஜாதக அமைப்பைக் கொண்டே நிர்ணயம் செய்ய இயலும்.

- மேஷ ராசியில் வக்கிரமான செவ்வாய், மணவாழ்க்கை இன்பத்தை பூர்த்தி செய்ய முடியாத சூழ்நிலையை ஏற்படுத்துகிறார்.
- ரிஷப ராசியில் வக்கிரமான குரு, ஜாதகரை மருத்துவத் துறையில் சிறந்தவராக ஞானமுள்ளவராக உருவாக்குகிறார்.
- மிதுன ராசியில் வக்கிரமான குரு, ஜாதகரை தர்ம சாஸ்திரம், உலக ஞானம் கொண்டவராக உருவாக்குகிறார்.
- கடக ராசியில் வக்கிரமான சுக்கிரன் ஜாதகரின் மணவாழ்வில் அதிருப்தியை உண்டாக்குகிறார்.
- ரிஷப ராசியில் வக்கிரமான சனி, நடக்கப் போவதை முன்னரே உணரும் சக்தியை ஜாதகருக்கு கொடுப்பதுடன், மற்றவர்களின் குறைகளை முன்னின்று தீர்த்து அவர்களுக்கு உதவி புரிபவராக அமைகிறார்.
- மிதுன ராசியில் வக்கிரமான சனி, ஜாதகரை ஒரு சிறந்த எழுத்தாளராக தத்துவஞானியாக உருவாக்குகிறார்.


தொடரும்...

# வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்



*தத: கதாசித்$_3$து$_4$ரி யாத$_3$வேந "ஸர்வம் கலு"*
*ச்ருத்யவிசாரதே$_3$நு ।*
*அபார்த்த$_2$ உக்தே ஸ யத$_2$ார்த்த$_2$முக்த்வா*
*ராமாநுஜோத$_3$ர்சயத$_3$ர்த்த$_2$ஸாரம்॥*
(12)

**ஒரு நாள் யாதவர் "ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம" (சாந். 3–14–1) (இவ்வுலகனைத்தும் ப்ரஹ்மமே) என்னும் வேதவாக்யத்திற்குப் பொருள் கூறுகையில் அதன் பொருளை உணராத யாதவர் அவப்பொருள் உரைத்தவுடன், இராமாநுஜர் உண்மைப் பொருளைக் கூறி, வேதார்த்த ஸாரத்தை அவருக்கு அறிவுறுத்தினார்.**



– "ஸுதர்சனம்" ஆசிரியர் இயற்றியது

# சமத்துவ நாயகன் ஸ்ரீமத் இராமானுஜர்



நம் புனித பாரதத்தில் இந்து மதமாகிய சநாதன தர்மம் நெடுங்காலமாக அனைத்து மக்களாலும் பின்பற்றப்பட்டு வருகிறது. இடையில் அது வேற்று மதங்களால் சற்றே பின்னடைந்தபோது ஸ்ரீசங்கரர், ஸ்ரீஇராமானுஜர், ஸ்ரீமத்வாச்சாரியர் ஆகியோர் முறையே அத்வைதம், விசிஷ்டாத்வைதம், த்வைதம் ஆகிய தமது கொள்கைகளை போதித்து மக்கள் உய்ய வழி செய்தனர். அவர்களில் இராமானுஜருடைய ஆயிரமாவது பிறந்த நாள் விழா சமீபத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. எம்பெருமானார், பாஷ்யக்காரர், திருப்பாவை ஜீயர், உடையவர் எனும் பெயர்களால் கொண்டாடப்படும் ஸ்ரீமத் இராமானுஜரின் பிறந்த நாள் சித்திரை மாதத்தில் வருகிறது.

சுருக்கமாக அவருடைய வரலாறு என்று பார்த்தால் அவர் பிறந்தது ஸ்ரீ பெரும்புதூர். தன்னுடைய ஆரம்பக் கல்வியை தனது தந்தை ஆசூரி கேசவ சோமயாஜியிடமும், மயூர வண்ணன் எனும் ஆசாரியரிடமும் கற்றுத் தேர்ந்த பின் திருக்கச்சி நம்பிகளை தன்னுடைய குருவாகவே வரித்திருந்தார்.

திருக்கச்சி நம்பிகள் அந்தண குலத்தில் பிறக்கவில்லை. ஆகையால் இராமானுஜரை தன்னுடைய சீடனாக ஒப்புக் கொள்ள அவர் மனம் கொள்ளவில்லை. ஆயினும் இராமானுஜர் அவரை தன் குருவாகவே எண்ணினார்.திருக்கச்சி நம்பிகள் காஞ்சியில் பேரருளாளனுக்கு ஆலவட்டம் வீசுவது, புஷ்ப கைங்கரியம் செய்வது ஆகியவற்றை நாள் தவறாது செய்து வந்தார். அவருடன் காஞ்சிப் பெருமாள் வரதன் பேசி மகிழ்வார்.

காஞ்சியில் யாதவப் பிரகாசர் எனும் ஆசானிடம் கல்வி கற்க சேர்ந்தார் இராமானுஜர். இரண்டு சந்தர்ப்பங்களில் குரு சொன்ன சாஸ்திர விளக்கங்களை மறுத்துப் பேச வேண்டி வந்தது. அவரிடம் குரு மிகுந்த கோபங்கொண்டார். சில பொறாமை கொண்ட மாணவர்கள் அவருக்குத் தூபம் போட ஒரு சதஸில் கலந்து கொள்ள காசிக்கு மற்ற மாணவர்களுடன் சென்ற இராமானுஜரை கொல்ல சதி நடந்தது.

இராமானுஜரை எப்போதும் நிழல் போல் தொடரும் அவருடைய சித்திப் பிள்ளை கோவிந்தன் தக்க சமயத்தில் மேற்கண்ட சதி பற்றி தமையனை எச்சரிக்க இராமானுஜர் தப்பி விட்டார். பின்னாளில் யாதவப் பிரகாசரே இராமானுஜரிடம் சீடராகச் சேர்ந்தது அதிசயமே.

தான் திருக்கோட்டியூர் நம்பியிடம் தவமாய்த் தவமிருந்து பெற்ற எட்டெழுத்து மந்திரப் பொருளை எவருக்கும் சொல்லலாகாது என்ற எச்சரிக்கையையும் மீறி தான் ஒருவன் நரகம் புகினும் மக்கள் அனைவரும் மோட்ச சாம்ராஜியத்தை அடைய வேண்டும் என்று விழைந்து ஊரில் உயர்ந்த கோபுரத்தின் மேலேறி நின்று அனைவரும் கேட்க அதை ஓதினார்.

ஸ்ரீரங்கத்தில் 31 ஆண்டுகள் ஆலய நிர்வாகப் பொறுப்பை திறம்படச் செய்தார். அங்கு மட்டுமன்றி திருப்பதி, மேல்கோட்டை, குஜராத்தில் சௌமிய நாராயணப் பெருமாள் கோயில் ஸ்ரீகூர்மம் ஆகிய அனைத்து கோயில்களிலும் இன்றும் கோயில் நடைமுறைகளில் உடையவர் எழுதி வைத்த – கோயில் ஒழுகு" எனும் நூலைத்தான் பின்பற்றுகின்றனர்.

திருமலையை அடைந்தபோது "இம்மலை ஆதிசேஷன் அவதாரம். எனவே இதை காலால் மிதித்து ஏறமாட்டேன்" என்று தவழ்ந்தேச் சென்று ஏழுமலையானை தரிசித்தார். இராமானுஜரும் சரி, திருமலையும் சரி ஆதிசேஷன் அவதாரங்களே! அதனால்தான் அங்கு சின்ன சேஷ வாகனம், பெரிய சேஷ வாகனம் என்று இரண்டு சேவைகள் பின்பற்றப்படுகின்றன.

இவர் ஆளவந்தாரை சந்திக்கச் சென்ற போது அவர் திருநாடு அலங்கரித்து விட்டார். மயக்கமுற்று, கலங்கி அழுத இராமானுஜரை பெரிய நம்பி தேற்றி அவர் திருமேனியைத் தரிசிக்க அழைத்துச் சென்ற போது அவருடைய வலக்கையில் மூன்று விரல்கள் மூடியிருக்கக் கண்டார். சற்று யோசித்த அவர், மக்களுக்கு "பஞ்சசம்ஸ்காரம் செய்விப்பேன்" என்று உரக்கச் சொல்லவும் ஒரு விரல் நேராயிற்று.

"ஸ்ரீபாஷ்யம் இயற்றுவேன்" என்று சொன்ன போது இரண்டாவது விரலும், "விஷ்ணு புராணம் இயற்றிய பராசரருடைய பெயரை நன்கு கற்றறிந்த ஒருவருக்கு இடுவேன்" என்றதும் மூன்றாவது விரலும் சரியாயிற்று. தன்னுடைய சீடரான அனந்தான் பிள்ளையை திருமலைக்கு அனுப்பி காடு திருத்தி பூந்தோட்டம் அமைக்கச் செய்தார். தாசரதி என்று இயற்பெயர் கொண்ட இவருடைய சகோதரி மகன் முதலியாண்டான் ஸ்வாமி, ஸ்ரீஇராமனின் அம்சம் என்று கூறுவர். இன்றும் இராமானுஜருடைய பிரதம சீடரான இவர் வழியில் பலர் வைஷ்ணவர்களாக விளங்குகின்றனர். மேல்கோட்டையில் சிறந்த பல சேவைகள் செய்த பின் அங்கிருந்து திருவரங்கத்திற்குப் புறப்பட்ட போது அடியார்கள் மனம் வருந்தினர். உடையவர் தன்னைப் போலவே ஒரு சிலை செய்வித்து தன் சக்திகளை அதனுள் செலுத்தி இதில் என்னைப் பார்த்து திருப்தி அடையுங்கள் என்று சொன்னார். இதுவே "தமர் உகந்த திருமேனி"

ஸ்ரீபெரும்புதூரிலும், தன் அடியார்கள் வருத்தம் தீர்க்க தன் சிலை ஒன்றை செய்வித்து அதைக் கட்டித் தழுவி – இச்சிலைக்குள் என் அம்சம் உள்ளதால் இதில் என்னைக் கண்டு ஆறுதல் அடையுங்கள் என்று கூறினார். அதுவே "தான் உகந்த திருமேனி".

திருவரங்கத்தில் அவர் பரமபதிக்கத் தயாரான போது மக்கள் மிகுந்த துக்கத்தில் ஆழ்ந்தனர். சிறந்த சிற்பிகளைக் கொண்டு தன் சிலையை நிர்மாணிக்கச் சொன்னார். பிறகு அதை காவிரியில் ஸ்னானம் செய்வித்து பீடத்தில் ஏற்றியபின் பிரும்ம மந்திரத்தின் வாயிலாக தம் மூச்சைப் பிடித்துக் கொண்டு தன் சக்திகளை அதில் நிலை நிறுத்தி அதனுடன் கலந்து விட்டார்.

ஸ்ரீரங்கநாதர் திருக்கோயிலில் அவருடைய உடல் இன்றும் அப்படியே பாதுகாத்து வைத்திருப்பதாகச் சொல்வர். அவ்வுடல் தனிச் சந்நிதியில் வீற்றிருக்கிறது. வருடம் இருமுறை மட்டும் பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ ஆகியவற்றால் அபிஷேகம் செய்யப்படும். அச்சிலையில் கண்கள்,










## ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 12-5-2022 | வியாழன் | --- | சேனாதிபதி உத்ஸவம், அங்குரார்ப்பணம் |
| 13-5-2022 | வெள்ளி | திருச்சி உத்ஸவம், துவஜாரோஹணம் | பெரிய சேஷ வாகனம் |
| 14-5-2022 | சனி | சிறிய சேஷ வாகனம் | ஹம்ச வாகனம் |
| 15-5-2022 | ஞாயிறு | சிம்ம வாகனம் | முத்துப்பந்தல் வாகனம் |
| 16-5-2022 | திங்கள் | கல்ப விருக்ஷ வாகனம் | சர்வ பூபால வாகனம் |
| 17-5-2022 | செவ்வாய் | பல்லக்கில் மோகினி அவதாரம் | கருட வாகனம் |
| 18-5-2022 | புதன் | ஹனுமத் வாகனம், மாலை வஸந்தோத்ஸவம் | யானை வாகனம் |
| 19-5-2022 | வியாழன் | சூரியப்பிரபை வாகனம் | சந்திரப்பிரபை வாகனம் |
| 20-5-2022 | வெள்ளி | திருத்தேர் | குதிரை வாகனம் |
| 21-5-2022 | சனி | பல்லக்கு உத்ஸவம், தீர்த்தவாரி, அவப்ருதோத்ஸவம், சக்ர ஸ்நானம் | திருச்சி உத்ஸவம் துவஜாவரோஹணம், ஏகாந்த சேவை |

நகங்கள் ஆகியவற்றை இன்றும் காணலாம். இது "தானேஆன திருமேனி".

இராமாநுஜர் உண்மையான சீர்த்திருத்தவாதி. தாழ்த்தப்பட்ட மக்கள் என ஒதுக்கப் பட்டவர்களை மேல்கோட்டையில் ஆலயப் பிரவேசம் செய்ய அனுமதித்து அவர்களை "திருக்குலத்தோர்" என அழைத்தார். ஏழை, பணக்காரர், உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி, ஆண், பெண் என்று எந்த பேதமுமின்றி எட்டெழுத்து மந்திரப் பொருளை அவர்களுக்கு ஓதினார். அன்றைய காலகட்டத்திலேயே சமத்துவத்தை பேண வழிவகுத்தவர் இராமாநுஜர்.

இராமாநுஜரைப் போற்றும் விதத்தில் தெலுங்கானா மாநிலம் ஹைதராபாத் நகரத்தின் முசிந்தல் எனும் இடத்தில் உலகிலேயே பெரியதான இராமாநுஜரின் சிலை அண்மையில் நிறுவப்பட்டது. இராமாநுஜரின் முக்கிய கொள்கையான சமத்துவத்தின் பெயரால் இதற்கு – "சமத்துவ சிலை" என்று பெயரிட்டு இருக்கிறார்கள். ஸ்ரீபாஷ்யகாரரின் பெருமைகளுக்கு இது ஒரு மகுடம் என்று கூறினால் அது மிகையல்ல. உய்யும் வழிக்கு உடையவர் சம்பந்தமே உபாயம்.

**-திருமதி மைதிலி சம்பத்,**
**செகந்திராபாத், 81256 16876**

## கார்வேடி நகரம் ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 22-5-2022 | ஞாயிறு | --- | சேனாதிபதி உத்ஸவம், அங்குரார்ப்பணம் |
| 23-5-2022 | திங்கள் | திருச்சி உத்ஸவம், துவஜாரோஹணம் | பெரிய சேஷ வாகனம் |
| 24-5-2022 | செவ்வாய் | சிறிய சேஷ வாகனம் | ஹம்ஸ வாகனம் |
| 25-5-2022 | புதன் | சிம்ம வாகனம் | முத்துப்பந்தல் வாகனம் |
| 26-5-2022 | வியாழன் | கல்ப விருக்ஷ வாகனம் | சர்வ பூபால வாகனம் |
| 27-5-2022 | வெள்ளி | பல்லக்கில் மோகினி அவதாரம் | கருட வாகனம் |
| 28-5-2022 | சனி | ஹனுமத் வாகனம், மாலை:வஸந்தோத்ஸவம் | யானை வாகனம் |
| 29-5-2022 | ஞாயிறு | சூரியப்பிரபை வாகனம் | சந்திரப்பிரபை வாகனம் |
| 30-5-2022 | திங்கள் | திருத்தேர் | குதிரை வாகனம் |
| 31-5-2022 | செவ்வாய் | பல்லக்கு உத்ஸவம், தீர்த்தவாரி அவப்ருதோத்ஸவம், சக்ர ஸ்நானம் | திருச்சி உத்ஸவம் துவஜாவரோஹணம் |





## திருமலை திருப்பதி தேவஸ்தானம்

### ஆந்திர மாநிலம்
### விசாகப்பட்டிணம் கடற்கரையருகில்
### ஸ்ரீமஹாலக்ஷ்மி, கோதா தேவி,
### ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம்

திருமலையில் உள்ள ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம் போன்று விசாகப்பட்டிணம் ரிஷி மலையில் இயற்கை எழில்களுக்கு இடையில் இந்த ஆலயம் கட்ட தி.தி.தேவஸ்தானம் 2019 –ல் அடிக்கல் நாட்டியது. இது கடல் மட்டத்திலிருந்து 60 மீட்டர் உயரம் கொண்டது. சுமார் 10 ஏக்கர் நிலப்பரப்பளவில் ரு.28 கோடி நிதிச் செலவில் தி.தி.தே. இவ்வாலயத்தை எழுப்பியது. இது சிறிய திருப்பதி போன்று இங்கு அனைத்து வசதி களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த ஆலயம் எதிரில் பேடி ஆஞ்சநேயர் ஸ்வாமி ஆலயமும் அமைந்துள்ளது. மூலமூர்த்திக்கு ஒரு புறம் ஸ்ரீபத்மாவதி தாயார் ஆலயமும், மறுபுறம் ஸ்ரீஆண்டாள் தாயார் ஆலயமும் அமைந்துள்ளது. இவ்வாலயத்திற்கான மஹா சம்ப்ரோக்ஷணம் 2022, மார்ச் 18 முதல் 23 வரை நடைபெற்றது.

இவ்வாலய சம்ப்ரோக்ஷண திருக்காட்சிகள் வாசகர்களின் பார்வைக்காக அடுத்த பக்கத்தில் அச்சிட்டு வழங்கியுள்ளோம்.






















ஆந்திர மாநிலம் விசாகப்பட்டிணம் கடற்கரையருகில் ஸ்ரீமஹாலக்ஷ்மி, கோதா தேவி

















ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலய மஹாசம்ப்ரோக்ஷண திருக்காட்சிகள்



30–03–2022 அன்று திருப்பதி ஸ்வேதா கட்டிடத்தில் நடைபெற்ற கோசாலை நிர்வாகிகள் மற்றும் பசு ஆதார இயற்கை விவசாயிகளுக்கான பயிற்சியினை காணொலிக்காட்சியின் வாயிலாக துவக்கி வைத்த தி.தி.தே. செயலாட்சித் தலைவர் டாக்டர் கே.எஸ். ஜவஹர் ரெட்டி ஐ.ஏ.எஸ். அவர்கள். இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்ட திருப்பதி இணைச்செயலாட்சித்தலைவர் திரு. வி. வீரப்ரஹ்மம் ஐ.ஏ.எஸ். அவர்கள் மற்றும் உயர் அதிகாரிகள்



25–03–2022 அன்று திருமலையில் பி.ஏ.சி.1 –ல் திடீர் தணிக்கை செய்து பக்தர்களின் கருத்துக்களை கேட்டு அறிந்த திருமலை திருப்பதி தேவஸ்தான பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள்



26–03–2022 அன்று திருவேங்கடமுடையானை தரிசிக்க வருகை தந்த அகோபில மடத்தின் 46வது ஜீயர் ஸ்ரீஸ்ரீஸ்ரீ ரங்கநாத யதீந்த்ர மஹா தேசிகன் ஸ்வாமிகளை ஆலய மரியாதைகளுடன் வரவேற்ற தி.தி.தே. கூடுதல் செயலாட்சித்தலைவர் திரு.ஏ.வி. தர்மாரெட்டி ஐ.டி.இ.எஸ். அவர்கள்



28–03–2022 அன்று ஸ்ரீமான் தாள்ளப்பாக்க அன்னமய்யாவின் 519 வது நினைவு நாளை முன்னிட்டு திருப்பதி அலிபிரியில் படி உத்ஸவம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தி.தி.தே. இணைச் செயலாட்சித்தலைவர் திரு. வி. வீரப்ரஹ்மம் ஐ.ஏ.எஸ். அவர்கள் மற்றும் கலைக்குழுவினர் பங்குகொண்டபோது








06–04–2022 அன்று பதவி உயர்வின் பொருட்டு பணி இட மாற்றம் காரணமாகச் செல்லும் சி.வி.எஸ்.ஓ. திரு கோபிநாத் ஜெட்டி ஐ.பி.எஸ். அவர்களுக்கு ஸ்வாமி படத்தை வழங்கும் தி.தி.தே. கூடுதல் செயலாட்சித்தலைவர் திரு.ஏ.வி. தர்மாரெட்டி ஐ.டி.இ.எஸ். அவர்கள். புதிய சி.வி.எஸ்.ஓ. வாக பதவிப் பொறுப்பு ஏற்ற திரு. டி.நரசிம்ம கிஷோர் ஐ.பி.எஸ். அவர்கள்



# திருமலையில் உள்ள அஞ்சனாத்ரி ஹனுமன் பிறந்த இடம் - புராணச் சான்றுகள்



ஹனுமன் மீதான தெய்வ பக்தி நம்பிக்கைகள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்தியாவிலும் வெளி நாட்டிலும், குறிப்பாக தென் கிழக்கு ஆசிய நாடுகளிலும் உள்ளன. எனவே, வட இந்தியாவில், இராம பக்தியைப் போலவே, ஹனுமன் பக்தியும் முக்கியத்துவம் அடைந்துள்ளது. வட இந்தியாவில் ஸ்ரீதுளசிதாசர் எழுதிய இராம சரித மானஸின் புகழ், ஸ்ரீவால்மீகி ராமாயணத்தைப் போலவே பெரியது என்று சொன்னால் அது மிகையாகாது. எனவே ஹனுமன் சாலிசாவை பாராயணம் செய்யாதவர்கள் மிகவும் அரிது.

புகழ் பெற்ற ஹனுமனின் பிறப்பிடத்திற்கு சில பக்தர்கள் அதிக கவனம் செலுத்துகிறார்கள். தேர்ந் தெடுக்கப்பட்ட இடங்களின் உள்ளூர் நாட்டுப்புறக் கதைகளின்படி ஹனுமன் இந்தியாவில் ஐந்து இடங்களில் பிறந்ததாக நம்பப்படுகிறது. சிலர் குஜராத்தில் உள் நவ்சாரி மாவட்டத்தின் டாங் பகுதி , சிலர் ஜார்கண்டின்அருகிலுள்ள அஞ்சனேரியில் மற்றும் சிலர் கர்நாடகாவின் ஹம்பிக்கு அருகிலுள்ள கிஷ்கிந்தாவில் ஹனுமன் பிறந்ததாகக் கூறுகின்றனர்.

இந்த இடங்களுக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகள் ஹனுமன் பிறந்த இடம் என்று நம்புகின்றனர். ஆனால் அவர்கள் தங்கள் வீட்டிற்கு வந்தவுடன் அவர்கள் நம்பியதை மறந்து விடுகிறார்கள். இந்த ஐந்திற்கும் நாட்டுப்புறக் கதைகளைத் தவிர வேறு ஆதாரம் இல்லை.

அனைத்தையும் போலல்லாமல், திருமலையில் உள்ள அஞ்சனாத்ரி, ஹனுமன் பிறந்த இடம் என்பதற்கு பல குறிப்புகள் உள்ளன. புராணங்களில் ஸ்ரீவேங்கடாசல மஹாத்மியத்தில் (பல்வேறு புராணங்களில் காணப்படும் திருவேங்கடவன் மற்றும் அவரது பிரபலமான மலைகளைப் பற்றிய ஒரு தொகுப்பு), பக்தி இலக்கியங்களில், சங்கீர்த்தனாச்சாரியர்களின் சங்கீதங்களில், ஆகமங்களில் ஏராளமான குறிப்புகளை காணமுடிகிறது.

இந்தக் குறிப்புகள் அனைத்தையும் மூன்று விதமாகப் பிரிக்கலாம். 1) ஸ்ரீசேஷாசல பர்வதங்கள் என்று அழைக்கப்படும் ஏழுமலைகளில் அஞ்சனாத்ரியும் ஒன்று என்று சில குறிப்புகள் கூறுகின்றன. 2) அஞ்சனா தேவி இந்த மலையில் குழந்தை

ஆங்கிலம் மூலம் : பேராசிரியர் ராணி சதாசிவ மூர்த்தி
தமிழாக்கம் : திருமதி ராஜலக்ஷ்மி










பேற்றிற்காக தவம் செய்ததாக வேறு சில குறிப்புகள் கூறுகின்றன. 3) வேறு சில ஆதாரங்கள் ஸ்ரீநிவாச மலைகள் ஹனுமன் பிறந்த இடம் என்று கூறுகின்றன.

இந்த சான்றுகளை ஆராயும் முயற்சியில், அஞ்சனாத்ரி குறித்து எவ்விதமாகச் சான்றுகள் காணப்படுகின்றன என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். 18 மகா புராணங்களிலும், ஸ்கந்த புராணத்தின் வட இந்திய மற்றும் தென் இந்திய பதிப்புகளில் அஞ்சனாத்ரி சந்தேகத்திற்கு இடமின்றி பல முறை குறிப்பிடப்பட்டுள்ளது.

ஸ்ரீவேங்கடாசல க்ஷேத்ர மஹாத்மியம் என்பது 12 புராணங்களின் தொகுப்பாகும். ஸ்ரீமத் ராமாநுஜர் காலத்திலிருந்தே இந்நூல் போற்றப்பட்டதாக ஸ்ரீவேங்கடாசல இதிஹாச மாலை நூல் கூறுகின்றது. ஸ்ரீவேங்கடாசல க்ஷேத்ர மஹாத்மியம் முதன் முதலில் 1929 ல் கல்கத்தாவைச் சேர்ந்த ஸ்வாமி மஹந்த் ஸ்ரீபிரயாக தாஸ் அவர்களால் வெளியிடப்பட்டது. இது பண்டிட் ஸ்ரீகேசரி காந்த் சர்மா மற்றும் பண்டிட் ஸ்ரீலக்ஷ்மிதர பதக் ஆகியோர்களால் அச்சிடப்பட்டது. இவற்றில் ஸ்கந்த புராண பாகம், ஸ்வதந்தர ஸ்கந்த புராணத்தில் உள்ளதைப் போன்று ஸ்ரீவேங்கடாசல க்ஷேத்ர மஹாத்மியத்திலும் இருப்பதால் மீதமுள்ள பதினொரு புராணங்களும் சான்றுகளே என்பதை அனைத்து அறிஞர்களும் ஒப்புக் கொள்கிறார்கள்.

இவ்விதமாகக் கிடைக்கப்பெறும் சான்றுகளைக் கருத்தில் கொண்டு ஆராயும்போது, ஸ்ரீவேதாந்த தேசிகரின் படைப்புகள், ஸ்ரீவேங்கடாத்வர் போன்ற கவிஞர்களின் படைப்புகள், அன்னமய்யா, புரந்தரதாசர், தரிகொண்ட வேங்கமாம்பா போன்றோரின் பக்திப் பாடல்களிலும், ஆகமங்களிலும் உள்ள ஸ்தோத்திரங்களும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. வேங்கடவனின் சஹஸ்ர நாமாவலி, ஸ்ரீவேங்கடேஸ்வர கத்யம் மற்றும் பிற வழிபாடுகளில் அடிக்கடி கூறப்படுகிறது.

ஸ்ரீசேஷாசலம் அல்லது ஸ்ரீவேங்கடாத்ரியின் புகழ்பெற்றது மற்றும்முதன்மையானது அஞ்சனாத்ரி என்று பிரம்ம புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கே இந்தச் சூழலில் 20ல் 16 பெயர்கள் மட்டுமே காணப்படுவதால் இந்த வசனங்கள் சந்தேகத்திற்குரியது என்று சில அறிஞர்கள் கூறுகிறார்கள். ஆனால் இது நாமானி விஞ்சதி (இவ்வாறு இருபது பெயர்கள்) என்று

கூறுகிறார்கள். ஆனால் இவை எழுதப்பட்ட பாடல்கள் அல்ல. இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்ட கீர்த்தனை களாகும். இறுதி நான்கு பெயர்களும் பல நூற்றாண்டு களுக்கு முன்பே மறைந்திருக்கலாம்.

மேலும், பத்ம புராணத்தில் இருந்து இரண்டு நிகழ்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. வேங்கடாசலத்தை தரிசித்தவர்களில் முதன்மையானவர் ஸ்ரீசுக்ல மகரிஷி. திருச்சுகனூரில் இன்றைய திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயாரை தரிசனம் செய்து ஸ்வாமி புஷ்கரணி நீரை அருந்தி, அங்கிருந்து அழகிய வேங்கடாசல திவ்ய க்ஷேத்திரத்தைக் கண்டதாகக் கூறும்போது அதை அஞ்சனகிரி என்றும், அஞ்சனாசலம் என்றும் குறிப் பிட்டார்.

மேலும் நாராயணாத்ரி என்று வர்ணிக்கப்படும் சூழ லில், அந்த மலையை அஞ்சங்கிரி என்றும், அஞ்சங்கிரி பள்ளத்தாக்கில் ஸ்வாமி புஷ்கரணி இருப்பதாகவும் கூறுகிறார்.சுக முனிவர் அதன் செங்குத்தான சரிவுகளின் வழியாக அஞ்சனாத்திரியை அடைந்து, அங்குள்ள புனித நீரோடைகளில் நீராடி, மலையடிவாரங்கள் வழி யாக பக்தியுடன் திரிந்தார். வியாச புத்திரர் அங்கு நீராடி விட்டு உபாசனையுடன் மூன்று நாட்கள் தங்கினார்.

**நாராயணாத்ரியின் விளக்கம் :**

அந்தப் பழமையான இடம் அஞ்சனகிரி மலையில் உதிக்கும் சூரியனின் ஒளியைப் போன்றது. அத்தகைய அஞ்சன கிரியில் உள்ள ஸ்வாமி புஷ்கரிணியில் நீராடுபவர்கள் செய்த காரியங்களில் வெற்றி கிட்டும்.

ஹனுமன் பிறப்பு ஸ்கந்த புராணத்தில் உள்ள வைஷ்ணவ காண்டத்தின் 39 மற்றும் 40 ஆம் அத்தியா யங்களில் மிக விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது. பல்வேறு இடங்களில் இருந்து ஆய்வு செய்தபடி ஸ்கந்த புராணத் தின் அனைத்து வட இந்திய மற்றம் தென்னிந்திய பிரதிகளிலும் இது காணப்படுகிறது.

அங்கே கூறப் பட்டுள்ளபடி, ஹனுமனின் பிறப்பு இந்த வேங்கடாத்திரி யிலேயே ஆகாச கங்கை அருகில் நடந்தது. மதங்க மகரிஷியின் ஆலோசனைப்படி அஞ்சனாதேவியின் தவம் காரணமாக ஹனுமன் இங்கு பிறந்ததால் பிரம்மாவின் ஆசியால் இந்த மலைக்கு அஞ்சனாத்ரி என்ற பெயர் வந்தது.













இங்கே ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். இந்த ஸ்கந்த புராணத்தின்படி அஞ்சனா தேவியின் தந்தை ஒரு அசுரன். அவர் பெயர் கேசரி. அவள் கணவன் ஒரு கபி வீரன். அவன் பெயர் கேசரி. இதனைப் பின்வருமாறு கூறப்பட்டடுள்ளது.

"ஓ மகாமனிதரே! மதங்க மஹரிஷி! என் தந்தை கேசரி என்ற அசுரன் சிவபெருமானின் பக்தர் (ஸ்கந்த புராணம்–ஸ்ரீவைஷ்ணவ காண்டம் 39–4,6 ).

அப்போது கேசரி என்ற வானரம் என் தந்தையிடம் அஞ்சனையை மனைவியாக அளிக்குமாறு கேட்டார். பெருந்தன்மையாக தந்தை தன் மகள் அஞ்ஜனையை வீர வானர மன்னன் கேசரிக்கு அளித்து லட்சக்கணக்கான பசுக்கள், ஒரு லட்சம் யானைகள், பல்லாயிரம் குதிரைகள், ஆயிரம் ஆடைகள் ஆகியவற்றைப் பரிசாக அளித்தார். (ஸ்கந்த புராணம் – ஸ்ரீவைஷ்ணவ காண்டம் 39–10,11 சுலோகங்கள்) .

ஸ்ரீவேங்கடாசல மஹாத்மியத்தின் பிரம்மாண்ட புராணமும் இதையே கூறுகின்றது. பிரம்மாண்ட புராணே தீர்த்தகண்டே பிருகு நாரத சம்வதே 68 சுலோகம்.

கேசரி என்ற அரக்கனுக்கு சிவபெருமானின் வரத்தால் பிறந்த அஞ்சனை, இளமைப் பருவத்தை அடைந்தபோது கேசரி என்ற உன்னத வானரம் அவளது தந்தையிடம் அவளை தனக்கு திருமணம் செய்து வைக்கும்படி கேட்டார். பிறகு தந்தையின் சம்மதத்துடன் திருமணம் செய்து கொண்டனர்.

இவ்வாறாக இந்த இரண்டு புராணங்களில் பிரம்மாண்ட புராணம் ஸ்ரீவேங்கடாசல மஹாத்மியத்தில் இது மிகவும் விரிவாக உள்ளது. அங்ஙனமே இவ்விரு நூல்களிலும் ஹனுமன் பிறந்ததலம் வேங்கடாத்ரியே என கூறப்பட்டுள்ளது.

மேலும் பிரம்மாண்ட புராணத்தின் 5வது அத்தியாயம் – தீர்த்தகண்டம் – பிருகு நாரத சம்வதே – ஓ அஞ்சனா! நீ இந்த சேஷாத்ரியின் மீது பெரும் தவம் செய்து, உலக நலனுக்காக இந்த மகனைப் பெற்றெடுத்தாய். எனவே இந்த வேங்கடகிரி அல்லது சேஷாத்ரி இனிமேல் உன் பெயரால் அஞ்சனாத்ரி என அழைக்கப்படும் என்று கூறிவிட்டு பிரம்மாவும் தேவர்களும் அவரவர் லோகங்களுக்குச் சென்றனர்.

பின்னர் அஞ்சனை மகிழ்ச்சியுடன் வேங்கடகிரியில் உள்ள தனது ஆசிரமத்தை தன் மகனுடன் அடைந்தாள். ஸ்ரீவேங்கடாசல மஹாத்மியத்தின் வராஹ புராணப் பகுதியில் (அத்தியாயம் 36இல் 28,29 வசனங்கள்) கலியுகத்தில் வேங்கடாத்ரி, திரேதா யுகத்தில் அஞ்சனாத்ரியாக இருந்ததாகவும் கூறப்படுகிறது. பல்வேறு விரத வழிபாடுகள் மூலம் அஞ்சனா தனது மகனைப் பெற்ற மலை என்பதால் அது அஞ்சனாத்ரி ஆனது.

ஹனுமன் பிறப்பினை வேறு பகுதிகளாகக்கூற பண்டைய இதிகாசங்களில் உதாரணங்கள் எங்கும் காணப்படவில்லை.

எனவே, மேற்கூறிய ஆதாரங்களின் மூலம், ஹனுமன் பிறந்த இடம் அஞ்சனாத்ரி என்பதை அறியலாம்.

ஸ்ரீவேங்கடாசல மஹாத்மியத்தின் பிரம்மாண்ட புராணத்தில் காணப்படும் ஆஞ்சநேய ஸ்வாமி இப்பகுதியில் பிறந்தது மட்டுமின்றி சிறு வயதில் கிரி, தீர்த்தம், ஆகியவற்றை சேவித்ததோடு மட்டுமின்றி, பக்தி, ஞானம் போன்றவற்றிற்கு விஷ்ணு தீர்த்தத்தை ஒரு தீர்த்தமாகவும் அவர் நிர்மாணித்ததாக அறியமுடிகிறது. அஞ்சனாத்ரியில் உள்ள மற்ற 108 புண்ணியத் தீர்த்தங்களில் ஆஞ்சநேய தீர்த்தம் என்றழைக்கப்படும் தீர்த்தமும் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

வேங்கட மலையில் அஞ்சனா தேவி தவம் இயற்றிய அஞ்சனாத்ரியில் ஆகாச கங்கை அருகில் ஹனுமனுக்கு ஆலயம் எழுப்ப தி.தி.தே. நிர்மானித்தது. அதற்காக அண்மையில் அஞ்சனாத்ரியில் பூமி பூஜையையும் தி.தி.தே. சார்பில் நடத்தப்பட்டது. தற்பொழுது அதற்கான கட்டுமானப் பணிகளும் நடைபெற்றும் வருகின்றன. நாமும் அஞ்சனை தவமியற்றி அஞ்சனகிரியில் ஹனுமனை தரிசித்து அனைத்து செயல்களிலும் வெற்றி பெறுவோம்.

**புராண வரலாறு :**

காச்யப ரிஷியின் புதல்வர்களான சூரன், பத்மன் இருவரும், பரமசிவனை நோக்கிக் கடுந்தவம் செய்து, பலவரங்களைப் பெற்று தேவர்களைத் துன்புறுத்தியதாகவும், தேவர்கள் வந்து முறையிட்ட போது, தானே வரங்கள் கொடுத்துள்ளதால் தன்னால் இதைத் தடுக்க இயலாது என்றும், திருச்செங்குன்றூர் பகவானை அண்டுமாறும் சொல்ல, தேவர்கள் இங்கு வந்து இத்தலத்து எம்பெருமானிடம் முறையிட, "இமையவர் அப்பன்" என்கிற இந்த எம்பெருமான், முருகன் மூலமாக சூரனையும், பத்மனையும் போரிட்டு அழிக்குமாறு சொன்னதாகவும், பலவித வடிவங்களில் வந்து சண்டையிட்டும் தோற்றுப்போன சூரனும், பத்மனும் மாமர வடிவில் போரிட வந்ததாகவும், முருகன் மரத்தைப் பிளந்து இரண்டாக ஆக்கி வெவ்வேறு இடங்களில் விழுமாறு செய்ததாகவும் சூரன், பத்மன் வேண்டுகோளுக்கு ஏற்ப, ஒருவனைக் கொடியாகவும், இன்னொருவனை வாகனமாகவும் முருகன் ஏற்றதாகவும் கூறுவர்.

மஹாபாரத யுத்தத்தில், தருமன், துரோணரை வீழ்த்திய செய்கையால் மன அமைதி இழந்து இருந்ததாகவும், இத்தலத்துக்கு வந்து இங்குள்ள சிற்றாறில் குளித்து பகவானை வழிபட்டு, கோயில் எல்லாம் கட்டி, மன அமைதி பெற்றுச் சென்றான் என்றும் சொல்வர்.

**சிறப்புகள் :**

தருமன், மன அமைதி பெற்ற தலம். நம்மாழ்வார் "இந்தத் திவ்யதேசத்து எம்பெருமானைத் தவிர வேறு எவரையும் சார்ந்து வாழேன். அவனை அல்லது என் ஆவி அமர்ந்து அணை இல்லாது" என்கிறார்.

| | | |
|---|---|---|
| பெருமாள் | : | இமையவர் அப்பன் (மேற்கு நோக்கிய நின்ற திருக் கோலம்) |
| தாயார் | : | ஸ்வர்ணவல்லி, செங்கமல வல்லி. |
| விமாநம் | : | ஜகஜ் ஜோதி விமாநம். |
| தீர்த்தம் | : | திருச்சிற்றாறு, சங்க தீர்த்தம். |
| ப்ரத்யக்ஷம் | : | ருத்ரன் |
| ஆகமம் | : | நம்பூதிரிகளின் பூஜா க்ரமம் |
| மங்களாசாஸனம் | : | நம்மாழ்வார். |

**விசேஷம்:**

ஆசார்ய ஹ்ருதயம் (அருளிய அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்) இந்த எம்பெருமானை சூரம், வீரம், பராக்ரமம் பொருந்தி யவர் என்று புகழ்கிறது. இதனை ஆசார்யரான ஸ்ரீமணவாள மாமுனிகள் "அங்கு அமரர்பேண, அவர் நடுவே வாழ்திருமாற்கு, இங்கு ஓர் பரிவர் இலை என்று அஞ்ச" என்றும், "வாராமல் அச்சம் இனி, மால்தன் வலியினையும், சீரார் பரிவருடன் சேர்த்தியையும் – பாரும் என, தான் உகந்த மாறன்" என்றும் புகழ்கிறார்.

**த்யானச்லோகம்**

*ஸ்ரீவிஷ்ணுர் தேவதா தஸ்த்*
*வருணஸரஸிஜா ரக்த நேத்ரஸ்தலேச*
*பச்சாத் ஸ்ரீசங்க தீர்த்தாச்ரய*
*புவிசஜகஜ்ஜியோதி ரங்கே விமாநே ।*
*யோபாதி ஸ்வர்ண வல்லயாஸ*




- உருப்பட்டூர் சௌந்தரராஜன்,
சென்னை.



ஹரிரநுதிநம்பாதுசி த்தேமதியே
பச்சாத் வக்த்ரச்ச பஸ்மாஸுர தநுமதநா சக்த
சம்பே: ப்ரஸந்ந: ||

**பாசுரம்**

"......... இடந்தளம்பெருமான்
முன்னை வல்வினைகள் முழுதுடன் மாள
என்னையாள்கின்ற எம்பெருமான்
தென்திசைக் கணி கொள் திருச்செங்குன்றூரில்
திருச்சிற்றாற் றங்கரை மீபால்
நின்றவெம்பெருமான், அடியெல்லால் சரண்
நினைப்பிலும் பிறிதில்லை எனக்கே.

– நம்மாழ்வார்

"வர வேண்டும் கண்டாய் மதிகலங்கி, விக்குள்
பொரவே உயிர் மாயும் போழ்து - பரமேட்டி!
செங்குன்றூர் மாலே! சிறைப்பறவை மேல்
கனகம்
பைங்குன்று ஊர் கார் போல் பறந்து"

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்.

**நாமாக்கள்**

611. ஓம் ஸ்ரீமதாம்வர: நம:

ஸ்ரீமான்களாகிய தேவர்களில் சிறந்தவனே.

ஓம் ரத்நபாதுகாயை நம:

ரத்நமயமான பாதுகையை அணிந்தவளே



612. ஓம் ஸ்ரீத: நம:

லக்ஷ்மிக்குத் தன் அன்பை அளிப்பவனே

ஓம் மநஸ் யமாநாயை நம:

நல்ல உள்ளம் படைத்தவளே

613. ஓம் ஸ்ரீஸ: நம:

லக்ஷ்மிக்கு ஈசனே.

ஓம் துளஸ்யை நம:

தோன்றும் போதே நறுமணமுள்ள துளசி போன்றவளே.

614. ஓம் ஸ்ரீநிவாஸா: நம:

லக்ஷ்மியின் நிலையான இருப்பிடமே.

ஓம் ரோகநாஸிந்யை நம:

எல்லா ரோகங்களையும் நாசம் செய்பவளே.

615. ஓம் ஸ்ரீநிதி: நம:

லக்ஷ்மிக்கு நிதி போன்றவனே.

ஓம் உருப்ரதாயை நம:

மிக உயர்ந்த மோக்ஷ புருஷார்த்தத்தையும் தானே அளிப்பவளே.

616. ஓம் லோகத்ரயாஸ்ரய: நம:

தாய் தந்தையைப் போல, லக்ஷ்மியும் தானுமாக உலகங்களுக்குப் புகலிடமாக இருப்பவனே.

ஓம் ப்ரஹ்மிஷ்டாயை நம:

எல்லாவற்றிலும் வியாபிக்கும் பெருமானையும் தனக்குள் அடங்கும்படி குணங்களாலே கவர்பவளே.

617. ஓம் ஸ்ரீதர: நம:

எப்போதும் லக்ஷ்மியைத் தரிப்பவனே

ஓம் ஸுகோஜ்வலாயை நம:

தரிசிப்பவர்களுக்கு இனிய ஜ்வாலை போன்று காட்சி தருபவளே.

618. ஓம் ஸ்ரீகர: நம:

எப்போதும் தன் அவதாரர்களுக்கு ஏற்றவாறு லக்ஷ்மியை அவதரிக்கச் செய்பவனே.

ஓம் மந்தரேகாயை நம:

பாக்யமில்லாதவர்களுக்கும், அருள் புரிந்து தேவத்தன்மையை கொடுப்பவளே.



# மங்கள சுலோகங்கள்

*மத்ஸ்யஹ் கூர்மோ வராஹஸ்ச நாரஸிம்ஹஸ்ச வாமநஹ ।*
*ராமோ ராமஸ்ச ராமஸ்ச க்ருஷ்ண ஹ் கல்கிர் ஜநார்தன ஹ ॥*

**மீன், ஆமை, வராஹம், நரசிங்கம், வாமனர், பரசுராமர், ராமர் (பல) ராமர், கிருஷ்ணர், கல்கி (என்னும் அவதாரங்கள்) ஜநார்த்தனனே (ஆகும்)**

*619. ஓம் ஸ்ரேய: ஸ்ரீமாந் நம:*

நன்மைக்கெல்லாம் இருப்பிடமான லக்ஷ்மியைப் பிரியாமல், சேர்ந்தே இருப்பவனே.

*ஓம் அம்ருதாஸிந்யை நம:*

தேவத் தன்மையைக் கொடுத்து, பகவானின் க்ருபைக்கும் பாத்ரமாகும்படி செல்பவளே.

*620. ஓம் ஸ்ரீவிபாவந: நம:*

லக்ஷ்மியினால் சிறப்பை அடைபவனே.

*ஓம் தேஜஸ்விந்யை நம:*

மிகுந்த பேரொளி உள்ளவளே.

*ஸ்ரீமதே ரக்தபங்கஜ வல்லீநாயிகா*

*ஸமதே ஸ்ரீதேவாதி தேவ பரப்ரஹ்மணே நம:*

**குறிப்பு :**

திருவனந்தபுரம் – எர்ணாகுளம் (வழி: கொல்லம்) ரயிலில் செங்கண்ணூர் ஸ்டேஷன் உள்ளது.

திவ்ய தேச வைபவம் வளரும்...





## மதுரகவியும் மதுரகவி தாசனும்...





திருக்கோளூரில் சித்திரையில் சித்திரை நந்நாளில் அவதரித்தவர் மதுரகவியாழ்வார். இவர் கண்ணிநுண்சிறுத்தாம்பு என்னும் பிரபந்தத்தை அருளினார். நம்மாழ்வாருக்கு சீடராய் இருந்தார். மூவுலகளந்த பற்பநாபனே பராங்குசனாக அவதரித்துள்ளான் என்றுணர்ந்த மதுரகவிகள் ஆழ்வார் திருவடித் தாமரைகளை வணங்கி, திருவடி முதல் திருமுடி வரை தொழுது முன்பு பிரளய காலத்திலே உலகங்களை வயிற்றில் அடக்கிக் கொண்டு தான் ஒரு ஆலந்தளிரில் அடங்கி விட்டது போல் மாமாயம் செய்யும் மாயப் பிரானே மாறனாக இந்த வடிவில் இங்கே வந்து நமக்கருள் செய்யக் காத்திருக்கிறான் என்று கருதினார்.

மேல் நாட்டில் மைசூர் அருகில் காவேரிக் கரையில் உள்ள சிறுபுத்தூரில் பாரத்வாஜ கோத்திரத்தில் கேசவாசாரியாருக்கு சித்திரையில் சித்திரை நக்ஷத்திரத்தில் அனந்தாழ்வான் அவதரித்தார். இவர் இயற்பெயர் அனந்தன். ஆசாரியர் ஆணைப்படி திருமலைக்குச் சென்று பூந்தோட்டம் உண்டாக்கி, புஷ்ப கைங்கர்யம் செய்ய துணிந்தபோது எம்பெருமானாரால் “ஆண் பிள்ளை” என்று விருது சூட்டப்பட்டார். அது முதல் இவர் அனந்தான் பிள்ளை என்று பிரசித்தரானார். அனந்தாழ்வான் திருமலையில், “இராமாநுஜன்” எனப் பெயர் சூட்டிய விசாலமான ஒரு நந்தவனமும் அதற்கு ஓர் ஏரியும், நந்தவனத்தின் நடுவில் ஓர் நடை பாதையும் உண்டாக்கினார்.

கீழ்த்திருப்பதி கோவிந்த ராஜப் பெருமாள் சந்நிதியில் மதுரகவிகளும் மதுரகவி தாஸரான அனந்தாழ்வானும் ஒரே கருவறையில் எழுந்தருளியுள்ளமை அனந்தாழ்வானுடைய மதுரகவி தாஸத்வத்தை நிலைநாட்டும் ப்ரத்யக்ஷ ப்ரமாண மாகும்.

தொடர்

# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,
சென்னை,
9841884972

**மணக்கால் நம்பிகள்வாழித்திருநாமம்...**

மணக்கால் நம்பி என்னும் ஆசார்யர் சோழ தேசத்தில் திருக்காவேரி தீரத்தில் கோயில் பிரதேசம் மணக்கால் என்னும் கிராமத்தில் விரோதிக்ருத் வருடம் மாசி மாதம் மக நக்ஷத்ரத்தில் அவதரித்தார். இவர் குமுதாக்ஷர் அம்ஸராய், ராமமிச்ரர் என்ற இயற்பெயரைக் கொண்டவர். ஆளவந்தார், திருவரங்கப்பெருமாள் அரையர், தெய்வத்துக்கரசு நம்பி, பிள்ளையரசு நம்பி, சிறுபுள்ளூருடையார் பிள்ளை, திருமாலிருஞ்சோலை, வங்கிபுரத்து ஆச்சி ஆகியோர் சீடர்கள் ஆவர்.

*தேசம் உய்யக்கொண்டவர்தாள் சென்னி வைப்போன் வாழியே*
*தென்னரங்கர் சீர் அருளைச் சேர்ந்திருப்போன் வாழியே*
*தாசரதி திருநாமம் தழைக்க வந்தோன் வாழியே*
*தமிழ் நாதமுனி உகப்பைத் தாபித்தான் வாழியே*
*நேசமுடன் ஆரியனை நியமித்தான் வாழியே*
*நீணிலத்தில் பதின்மர்கலை நிறுத்தினான் வாழியே*
*மாசி மகந்தனில் விளங்க வந்துதித்தான் வாழியே*
*மால் மணக்கால் நம்பி பதம் வையகத்தில் வாழியே*

**பதவுரை**

தேசம் – ஒளியுடைய, உய்யக்கொண்டவர்தாள் – உய்யக்கொண்டார் என்னும் ஆசார்யர் திருவடியில், சென்னி வைப்போன் – தலையை வைத்து வணங்கும் மணக்கால் நம்பி, வாழியே–வாழ வேண்டும். தென்னரங்கர் – தெற்குத் திக்கிலுள்ள திருவரங்கர், சீர்–சீரியதான, அருளை – அருளை, சேர்ந்திருப் போன் – பெற்றவர். தாசரதி – தசரதன் மகனான இராமன், திருநாமம் – பெயரையுடைய ராம மிச்சர், தழைக்க வந்தோன் – சிறப்பாக வாழ்ந்தவர். தமிழ் நாதமுனி – தமிழ் பிரபந்தத்தை வளர்த்த, நாதமுனி – ஸ்ரீமந்நாதமுனிகள் என்னும் ஆசார்யர், உகப்பை – மகிழ்ச்சியை, தாபித்தான் – நிலை நிறுத்தியவர். நேசமுடன் – அன்புடன், ஆரியனை – ஆசார்யரான ஆளவந்தாரை, நியமித்தான் – தன் சொல்படி கேட்கச் செய்தவர். நீணிலத்தில் – பெருமை பொருந்திய உலகில், பதின்மர் – பத்து ஆழ்வார்களின், கலை – அருளிச் செயலை, நிறுத்தினான் – நிலை பெறச் செய்தவர். மாசி மகந்தனில் – மாசி மாதம் மகம் நக்ஷத்ரத்தில், விளங்க – பிரகாசிக்க, வந்துதித்தான் – வந்து அவதரித்தவர். மால் – பெருமை பொருந்திய



மணக்கால் நம்பி, பதம் – திருவடிகள், வையகத்தில் உலகில், வாழியே – வாழ வேண்டும்.

**சிறப்புரை**


(தேசம் உய்யக்கொண்டவர்தாள் சென்னி வைப்போன்) “தேசு” என்ற வடசொல், தேசம் என்றாயிற்று. “தேசம் உடையாய்” (திருப்பாவை 7) என்று ஆண்டாள் திருப்பாவையில் அருளியது காண்க. தேசு – ஒளி, ஞானம், பெருமை என்று பல பொருள். ஸ்ரீமந்நாதமுனிகள் அருளைப் பெற்றதனால் உய்யக்கொண்டார் தேசுடையவரானார்.

மேலும், ஸ்ரீமந்நாத முனிகளிடம் தமிழ் ஞானமாகிற திவ்ய ப்ரபந்தத்தைப் பெற்றதனால் தேசமுடையவரானார். அவற்றை மணக்கால் நம்பி உள்ளிட்ட தம் சீடர்களுக்கு அருளியதால் பெருமை படைத்து தேசமுடையவரானார். அத்தகைய பெருமை படைத்த உய்யக்கொண்டார் திருவடிகளைத் தம் தலையில் சேர்த்துக் கொண்டவர் மணக்கால் நம்பி.

எங்ஙனே என்னில் – பன்னிரண்டு வருடம் தம் ஆசார்யரான உய்யக்கொண்டார் திருவடிகளிலே இளைய பெருமாளைப் போலே எல்லாவித கைங்கர்யங்களையும் செய்தவர். ஆசார்யருடைய தேவிகள் பரமபதித்த பிறகு, திருமாளிகை கைங்கர்யமெல்லாம் தமக்கே பொறுப்பாய் நடத்தி வந்தவர் நம்பி. ஒரு சமயம் தம் ஆசார்யர் புத்ரிகளை நீராட்டி அழைத்துக் கொண்டு வருகிற வழியிலே வாய்க்கால் சேறாயிருக்கக் கண்டு, தாம் குறுக்கே பாலமாகப் படுத்துக் கொண்டு படியாய்க் கிடந்து அவர்களைத் தம் முதுகிலே அடி இட்டு அழைத்துக் கொண்டு போனார்.

உய்யக்கொண்டார் இந்த விஷயம் அறிந்து “இவர் இப்படிச் செய்யாதே” என்று மிகவும் அன்புடையவராய், நம்பி சென்னியைத் தம் திருவடித் தாமரைகளாலே அலங்கரித்தார். ப்ரமேய ரத்னம் என்னும் நூலில் மூன்றாவது பிரகரணத்தில் “ஆசார்ய கைங்கர்யத்துக்குப் படிமா வடுகநம்பியோடு மணக்கால் நம்பி” என்றது காண்க. இதுபற்றியே “(ஆசார்யர்) தாள் சென்னி வைப்போன்” என்று அருளியபடி.

தொடரும்...



## கன்னன் கருத்துரை

*தத்வித்தி ப்ரணிபாதேன பரிப்ரச்னேன ஸேவயா।*
*உபதேக்ஷ்யந்தி தே ஞானம் ஞானினஸ்தத்வதர்சின ॥*

(4-34)

**தத்துவம் அறிந்த ஞானிகள்**
**கிடைத்தபோது அவரை அடக்கத்தோடு**
**வணங்கி, அறிய வேண்டும் என்கிற**
**ஆர்வத்தோடு கேட்டு,**
**எல்லாவகையானும் வழிபட்டு, தக்க**
**சமயத்தில் வினவினால் அவர்கள்**
**ஞானத்தை அருளுவார்கள்.**



தொகுப்பு :
பேராசிரியர் அமரர் பொன் சௌரிராஜன்,
திருப்பதி.



# ஸ்ரீமத் பகவத்கீதை

தெலுங்கு மூலம் : திரு.கே. விஸ்வநாத சாஸ்திரி
தமிழாக்கம் : டாக்டர் சி. கோவிந்தசாமி

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

அப்படிப்பட்ட வம்சங்களுள் காசிராஜன் வம்சமும் ஒன்று. மற்றொரு வம்சம் விதேஹ ராஜாவின் வம்சம். இந்த இரண்டு வம்சத்திலும் பிறப்பவர்கள் எல்லோரும் சிறந்த வீரர்களாகத் திகழ்வார்களாம். இது எப்பொழுதிலிருந்து ஆரம்பமானது என்றால், உபநிஷத்து காலத்திலிருந்து தொடங்கி தொடர்ந்து வருகிறது. உபநிஷத்து காலத்திலும் கூட காசிராஜனும் விதேஹ ராஜனும் சிறந்த வீரர்களாக இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

பிருஹதாரண்யகோபநிஷத்தில் ஒரு இடத்தில் *''யதா காஷ்யவா வைதேஹோவா உக்ரம் தனுரதித்யும் க்ருத்வா''* என்று சொல்லப்பட்டுள்ளது. எனவே, அப்படிப்பட்ட வீர வம்சத்தில் பிறந்தவர்கள் நம்மோடு இல்லாமல் அவர்கள் பக்கம் இருக்கிறார்களே என்ற பொறாமை. மேலும், "காசி ராஜஸ்ச'' என்று உள்ளது அல்லவா. அச்சொல்லுக்கு வேறொரு விதமாகவும் பொருள் காணலாம். பிருஹதாரண்யகோபநிஷத்திலேயும் "காசி ராஜஸ்ச'' என்ற சொல்லே குறிக்கப்பட்டுள்ளது. ஆகையால் இவ்விரண்டிற்கும் சம்பந்தம் உள்ளதா என்றால், நிச்சயம் உள்ளது. காரணம் அந்த உபநிஷத்தினுடைய சாரமே ஸ்ரீமத் பகவத்கீதை. அந்த விஷயத்தை தெரிவிப்பதற்காக "காசிராஜஸ்ரீ" என்று கூறியுள்ளதாகவும் புரிந்துக் கொள்ளலாம்.

"காசி ராஜஸ்ச வீர்யவான்'' என்பதைப் போலவே புருஜித், குந்திபோஜஸ்ச என்பதும். குந்தி போஜஸ்ச என்ற பெயர் உண்மையில் குந்திதேவியின் தந்தை. அதாவது குந்தி தேவியை வளர்த்த தந்தை. அந்த வம்சத்தில் உள்ள அரசர்கள் பெயர்களெல்லாம் "குந்தி போஜஸ்ச" என்றே உள்ளது.

எனவே, அந்த வம்சத்தில் வந்த பாண்டவர்களின் சமகாலத்தில் வாழ்ந்த வீரர் ஒருவரின் பெயராகும். அதே போல, "ஷைப்யஸ்ச" என்பது "ஷைப்யன்'' என்று சொல்லப்படும். இவன் சிபி தேசத்து அரசன் ஆவான்.

இவன் "நரபுங்கவ" அதாவது, சிறந்த வீரன். அப்படிப்பட்ட சிறந்த வீரர்கள் எல்லாம் சென்று பாண்டவர்கள் பக்கம் சேர்ந்து விட்டார்களே என்று பொறாமைக் கொண்டு அதை அவன் வார்த்தைகளால் வெளிப்படுத்துகிறான். இன்னும் சில வீரர்களின் பெயர்களையும் அடுத்து வரும் கீழ் சுலோகத்தில் தெரிவிக்கின்றான்.

*''யுதாமன்யஸ்ச விக்ராந்த உத்தமௌஜாச்ச வீர்யவான்*
*ஸௌபத்ரோ த்ரௌபதேயாச்ச ஸர்வ ஏவ மஹாரதா:''*

"யுதாமன்யு'' என்பவன் ஒரு வீரன். இவன் திருஷ்டத்யுமனுக்கு தம்பி முறை ஆவான். இவனை விக்ராந்த: என அழைக்கிறான். "விக்ராந்த" என்றால்

சிறந்த வீரன், பராக்ரமம் உடையவன் என்பது பொருள். அப்படியே "உத்தமௌஜா" என்பவன் யுதாமன்யுவுக்குத் தம்பி முறையாகும். இவனும் சிறந்த வீரனும் பராக்ரமும் உடையவன்.

எனவே அவனை "உத்தமௌஜாஸ்ச வீர்யவான்" என்று குறிப்பிடுகின்றான். மேலும், "ஸௌபத்ர" இவன் சுபத்ரையின் குமாரன் அபிமன்யு ஆவான். பதினாறு வயது. இன்னும் கல்வி கலைகளிலும் முழுமையாகத் தேர்ச்சிப் பெறாத நிலையில் இருப்பவன். இருந்தாலும் அந்த வயதிலேயே அனைவராலும் மகாவீரன் எனப் போற்றப்படும் பெருமை பெற்றவன்.

நெஞ்சத்தில் உறுதியும், உள்ளத்தில் உரமும் பெற்று விளங்குபவன். அவனை நேருக்கு நேர் நின்று போர் செய்து வெல்வது என்பது முடியாத காரியம். மேலும், த்ரௌபதேயாச்சன என்பது திரௌபதி பாண்டவர்கள் மூலம் ஐந்து புதல்வர்களைப் பெற்றாள் என்பதை நாம் அறிவோம். அவர்களில் தர்மராஜா விற்கு பிரிதி விந்தியன் என்ற புதல்வனும், பீமனுக்குச் சுதசோமன் என்பவனும், அர்ச்சுன னுக்கு சுருதகர்மாவும், நகுலன் மூலம் சதானீகன் பிறந்தான். சகாதேவனுக்குச் சுதசோனன் என்னும் முறையில் ஒவ்வொரு பாண்டவர்க்கும் ஒரு புதல்வர் என்ற வகையில் ஐந்து குமாரர்கள் இருந்தனர். இவர்கள் ஐவரும் கூட சிறந்த வீரர்களாவர். இவர்கள் ஒவ்வொருவரைப் பற்றியும் அவன் நினைத்துப் பார்க்கின்றான்.

இங்கு நாம் கவனிக்க வேண்டிய விஷயங்கள் இரண்டு. ஒன்று அவன் அங்குள்ள தம் உறவினர் களை உறவு முறை கொண்டு, இவன் என் தம்பி, என் அண்ணன், என் மாமன் என்று உறவு முறை வைத்து அழைத்தான் என்றால் இல்லை.

அவர்களுடைய தாய் பெயரையோ, தந்தை பெயரையோ சொல்லியே அடையாளப்படுத்து கிறான். அதாவது "ஸௌபத்ர:" என்றும், சுபத்திரை பெயரையே சொல்கிறான். "த்ரௌபதேயாஸ்ச" என்று திரௌபதி பெயரை குறிப்பிடு கிறானேத் தவிர, என் தம்பி பிள்ளைகள் என்று சொல்லவில்லை. காரணம், மனித உறவுகள் மீது மதிப்போ மரியாதையோ கொஞ்சமும் இல்லை.

இந்த யுத்தத்தில் எப்படியாவது தான் வெற்றிக் கொள்ள வேண்டும் என்ற குறிக்கோள் மட்டுமே குறியாக இருக்கிறான். இப்படிப்பட்ட எண்ணம் ஆசை உடையவன் என்ன கதிக்கு ஆளாவான் என்பதற்கு நேரடி சாட்சியாக விளங்குபவன் துரியோதனன்! மனித உறவுகளுக்கு மதிப்புக் கொடுக்காமல், நிலையற்ற பொருள்களுக்கும், நாடு நகரங்களுக்கும், அதிகாரத்திற்கும் ஆட்பட்டு அலைபவர்களுக்குத் துரியோதனனுக்கு ஏற்பட்ட கதியே கிடைக்கும் என்பதற்கு இதுவே எடுத்துக்காட்டாகும்.

"ஸர்வ ஏவ மஹாரதா:" என்று கூறுகிறான். அதாவது, எல்லோரையும் சிறந்த ரதவீரர்கள் என்று குறிப்பிடுகின்றான். ரத வீரர்களிலும் பல வகையினர் உள்ளனர். அவர்களைப் பற்றி மேலும் பார்ப்போம். தெரிந்து கொள்வோம்.

தொடரும்...



**ஜூன் மாத பண்டிகைகள், பருவ தினங்கள் மற்றும் தி.தி.தே. ஆலய உற்சவங்கள்**

| | |
|---|---|
| 01 | கார்வேடிநகரம் ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி புஷ்பயாகம் |
| 04-13 | திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பிரம்மோத்ஸவம் |
| 09-18 | அப்பளாயகுண்டா ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் |
| 09 | மெயின் வரதராஜ ஸ்வாமி திருநட்சத்திரம் |
| 10-14 | திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் தெப்போத்ஸவம் |
| 12 | நம்மாழ்வார் சாத்துமுறை |
| 12-14 | திருமலையப்ப ஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம் |
| 20-22 | திருச்சானூர் ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமி அவதாரோத்ஸவம் |
| 27-ஜூலை7 | நாராயனவனம் ஸ்ரீபராசரேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் |

# ஸம்ஸ்க்ருதம் அறிவோம்

## षोडशः पाठः பாடம்-16

| | | | | | |
|---|---|---|---|---|---|
| कलशः | = சொம்பு | सम्यक् | = நன்றாக | कुर्यात् | = செய்து, செய்வேன், வேண்டும், போதும் |
| अलम् | = போதும் | जलम् | = தண்ணீர் | कुर्याः | = செய்வோம், வேண்டும், போதுமானது |
| मञ्चः | = கட்டில் | झटिति | = வேகமாக | कुर्याम् | = செய்வேன், வேண்டும், போதுமானது |

### வினாக்கள்

1. बालकाः मञ्चे आसन्।
2. कलशे जलम् अस्ति वा?
3. जलं सम्यक् नास्ति।
4. एषः अस्मद् मञ्चः।
5. युष्मत्कलशाः कुत्र सन्ति?
6. यूयं पाकं झटिति कुरुत।
7. अद्य पाकं कः कुर्यात्?
8. त्वं शाकं कुर्याः, अहं पाकं कुर्याम्।
9. त्वम् एकः एव शाकं कुर्याः किम्?
10. अहम् एकोऽपि पाकं शाकमपि सम्यगेव कुर्याम्।

1. போதும், நீங்கள் விரைவாகக் குளியுங்கள்.
2. நீங்கள் ஏரியில் குளிக்க வேண்டாம்.
3. எங்கள் வீட்டில் தண்ணீர் இருக்கிறது. அங்கு குளியுங்கள்
4. உங்கள் வீடு எங்குள்ளது?
5. எங்கள் வீடு அங்குள்ளது.
6. நீ விரைவாக சாப்பிட வேண்டும்.
7. நான் இப்பொழுது செய்ய மாட்டேன்.
8. பின்னர் செய்வேன்.
9. அங்கு எத்தனை சிறுவர்கள் சாப்பிட்டார்கள்?
10. அங்கு ஒருவரும் சாப்பிடவில்லை.

### விடைகள்

1. சிறுவர்கள் கட்டிலில் இருந்தார்கள்.
2. சொம்பில் தண்ணீர் இருக்கிறதா?
3. தண்ணீர் நன்றாக இல்லை.
4. இது எங்களுடைய கட்டில்.
5. உங்களுடைய சொம்பு எங்கிருக்கிறது?
6. நீங்கள் விரைவாக சமையலைச் செய்யுங்கள்.
7. இந்த வேளை சமையலை யார் செய்ய வேண்டும்?
8. நீ குழம்பு செய்வாயாக, நான் சமையலை (உணவை)ச் செய்கிறேன்.
9. நீ ஒருத்தியே குழம்பு செய்வாயா என்ன?
10. நான் ஒருத்தியே சமையலை(உணவை)யும், குழம்பும் நன்றாகச் செய்வேன்.

1. अलम्, यूयं झटिति स्नानं कुरुत।
2. यूयं तटाके स्नानं न कुरुत।
3. अस्मद्गृहे जलमस्ति; तत्र स्नानं कुरुत।
4. युष्मद्गृहं कुत्रास्ति?
5. अस्मद्गृहाणि तत्र सन्ति।
6. त्वं झटिति भोजनं कुर्याः।
7. अहं इदानीं न कुर्याम्।
8. अनन्तरं कुर्याम्।
9. तत्र कति बालकाः भोजनम् अकुर्वन्?
10. तत्र एकोपि भोजनं न अकरोत्।

தெலுங்கு மூலம் : மகாமகோபாத்யாய காசி கிருஷ்ணாசாரி, தொகுப்பு : மகாமகோபாத்யாய சமுத்ரால லக்ஷ்மணய்யா
தமிழாக்கம் : டாக்டர் கே.கே.ஏ.ரங்கராஜன்

அலசுவோம்......
அறிவோம்....
ஆதிகாவிய நாயகர்களை......

# ஆணும் பெண்ணுமாகிய அம்பை (ஏ) சிகண்டி

–அமரர் சத்யதாரா, சென்னை,

மஹாபாரதம் எனப்படும் மகத்தான காவியத்தில்...

நூற்றுக்கணக்கான கதாபாத்திரங்கள் காணப் படுகின்றன. இதுவரை அனைத்து கதாபாத்திரங் களையும் ஆழ்ந்து நோக்கி அனுபவித்த சான்றோர் மிகச் சிலரே இருக்கக்கூடும். சில கதாபாத்திரங்கள் பிரதானமானவை. பஞ்சபாண்டவர்கள், திரௌபதி, திருஷ்டத்யும்னன், கௌரவர்கள் அவர்களது பெற்றோர், பீஷ்மர், சகுனி, சல்லியன் போன்ற அரச வம்சத்துடன் நெருங்கிய உறவு கொண்டவர்கள்.

அடுத்தவட்டத்தில் மிக நெருங்கிய உறவினர் களும், அண்டை நாடுகளின் மன்னர்களும், தவ வலிமை கொண்ட பல முனிவர்களும், சரித்திரத்தின் முக்கிய திருப்பங்களுக்கு காரணமாகின்றனர். சில கதாபாத்திரங்களின் பங்கு மிக மிகக் குறைவே. ஓரிரு கட்டங்களில் மட்டுமே பங்கு கொள்கிறார்கள். அவர்களின் பங்கு இல்லையேல், காவியத்தின் போக்கே மாறி இருக்கக் கூடும்.காவியத்தின் நிகழ்வுகள் அனைத்திற்கும் சிகரம் வைத்தாற்போல் ஜ்வலிப்பது அவதார நாயகனான ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் லீலா விநோதங்கள்...!

இவர்களை சுற்றித்தான் மஹாபாரதம் எனப்படும் மாபெரும் சரித்திரம் உருவாகியுள்ளது. கற்பனையாக ஒரு காவியத்தை படைப்பதென்றால், மஹாபாரதம் அருளிய வேத வியாசர் தன்னையும், தனது நெருங்கிய உறவினர்களையும், நண்பர்களை யும் மிக நல்லவர்களாகவே காட்டிக் கொண்டு இருக்கலாம். உண்மை அவ்வாறு இல்லை. என்ன நடந்ததோ அதை அப்படியே எடுத்து உரைத்து இருக்கிறார். (இதிஹாஸம் என்றால் இப்படி நடந்தது என்றே பொருள்) தன்னையே சில கட்டங்களில் சில பெண்கள் இழிவாகப் பேசுவதை, ஒளிக்காமல் குறிப் பிட்டு இருக்கிறார். அனைத்தையும் அலசுவோம்.

அம்பை செய்த சாஹஸம் என்ன? மிகவும் சுவையான வரலாறு இது... அம்பை எனப்படும் ஒரே ஒரு கதாபாத்திரம் மட்டுமே இரண்டு ஜன்மங்களி லும் (பூர்வ ஜன்மம், மறு ஜன்மம்) காவியத்தில் அதுவும் ஜன்மாந்தர தொடர்புடன் காணப்படுகிறார். அம்பை தன்னை காதலித்த சால்வன் என்ற அரச குமாரனிடமும், தன்னை ஸ்வயம்வரத்தில் வென்று வந்த பீஷ்மரிடமும், பல முறைகள் அலைந்து தன்னை விவாஹம் செய்து கொள்ளும்படி கோரிய வண்ணம் இருந்தாள்.

சால்வன் எனும் ராஜகுமாரன், தன்னை வென்று கொண்டு செல்லப்பட்ட கன்னிகையை ஒரு போதும் மணந்து கொள்ள மாட்டேன் என்று தீர்மானமாகக் கூறி விட்டான். அம்பை, பீஷ்மர் மேல் கடுமையான தீராத சினம் கொண்டாள். அண்டை நாட்டு மன்னர் கள் அனைவரையும் ஒவ்வொருவராக சந்தித்து பீஷ்மர் மேல் போர் தொடுக்கும்படி மன்றாடி வந் தாள். பீஷ்மரின் வலிமையை அறிந்த அனைவரும் அது தங்களால் இயலாத காரியம் என்று மறுத்து விட்டனர். வனத்திற்குச் சென்று, "முருகப் பெருமானை" நோக்கி கடும் தவம் செய்தாள். பல காலம் கடுமையான தவத்திற்குப் பின், முருகப் பெருமான் அம்பைக்குக் காட்சி கொடுத்து வாடாத வொரு புஷ்ப மாலையை கொடுத்து அருளினான்.

இந்த புஷ்ப மாலையை எவன் தரித்துக் கொள்கிறானோ, அவன் பீஷ்மருக்கு சத்ரு ஆவான். அவன் மூலம் நீ பீஷ்மனை வீழ்த்தி விடலாம் என்று அருளினான். புஷ்ப மாலை தனை பெற்றுக் கொண்டாள் அம்பை. நேச நாட்டு மன்னர்கள் பலரை அணுகி மாலையை அணிந்து கொண்டு பீஷ்மருடன் போரிட்டு வீழ்த்தும்படி கோரினாள். மாலையின் மகத்தான சக்தி பற்றியும் குறிப்பாக உரைத்தாள். நாட்கள் கடந்தன. எந்த ஒரு மன்னனும் பீஷ்மருடன் மோதி அவருடைய பகைமையை வளர்த்துக் கொள்ள விரும்பவில்லை.

மனம் வெறுத்து, முருகப் பெருமான் அளித்த புஷ்ப மாலையை பாஞ்சால நாட்டில் துருபதன் என்ற மாமன்னனுடைய அரண்மனை வாயிலில் மாட்டி விட்டு வனத்திற்குச் சென்றாள். துருபத மன்னன் அம்பையை தொடர்ந்து தனது வீரர்களுடன் சென்றான். தனக்கும் பீஷ்மருக்கும் இடையில் பகைமையை வளர்க்கும் ஒரு செயலை தன்னால் அனுமதிக்க இயலாது என்றும், மாலையை திரும்ப எடுத்துக் கொண்டு செல்லும்படியும், துருபதன் செய்த முயற்சிகள் அனைத்தும் பயனளிக்காமல் போனது. மாலையை தீண்டாமலும் பல காலம் அதனை யாரும் எடுத்துச் செல்லாமலும் பாதுகாத்து வந்தான்.

அம்பை பாஞ்சால நாட்டினை விட்டு வெளியேறி வனத்தில் இருந்த பல தபோவனங்களில் வாழ்ந்த, பல ரிஷிகளிடம் தனது நிலையைக் கூறி, அதற்கு தீர்வு என்ன என்று வேண்டி முறையிட்டாள். மஹரிஷிகள் இவளது நிலையைக் கண்டு மனம் இரங்கி, இறுதியாக அவளை அவதார புருஷரான பரசுராமரிடம் சென்று உதவி பெறுமாறும், பரசு ராமரை பீஷ்மருடன் போரிடுமாறும் வேண்டும்படி உபதேசம் செய்தனர்.ரிஷிகள் உபதேசித்த, அவதார புருஷரான பரசுராமரிடம் சென்றாள். தனது வரலாற்றினை தெளிவாகக் கூறினாள். தனக்கு உதவிடும்படி மன்றாடினாள். பீஷ்மரை வீழ்த்திட வேண்டும் என்றும் கோரினாள். பரசுராமர் அவள் மீது இரக்கம் கொண்டார். உன்னை பீஷ்மன் விவாஹம் செய்து கொள்ளும் படி செய்கிறேன். அது என்னால் முடியும்.... என்கிறார். இதை மறுத்த அம்பை, பீஷ்மரை வீழ்த்த வேண்டியதே தனது கோரிக்கை என்று உறுதியாக நின்றாள். பீஷ்மருடன் பல நாட்கள் யுத்தம் புரிந்த பரசுராமர்... தோல்வியே கண்டார். அம்பையிடம், அவரை வீழ்த்துவது தன்னால் இயலாத காரியம் என்று கூறி, இறுதியாக பீஷ்மரையே சரணடையும்படி அறிவுறுத்தினார். அம்பையினால் இதனை ஏற்க இயலவில்லை.

மனித வர்க்கத்திடம் இருந்து பெற இயலாத உதவியினை மஹேஸ்வரனிடத்தில் இருந்து பெறுவது என்று தீர்மானம் செய்தாள். சிவ பெருமானை நோக்கி கடும் தவமியற்றினாள். ஒரு நிலையில் சர்வேஸ்வரன் பிரசன்னம் ஆனார். “இப்பிறப்பில் உனது கர்மா உன்னை காப்பாற்றாது. உனக்கு உடனடியாக மறு ஜன்மம் உண்டு. அடுத்த பிறப்பில் உன்னாலேயே பீஷ்மரின் மரணம் சம்பவிக்கும்” என்று ஒரு வரம் அருளினார். இந்த ஜன்மத்தில் உயிருடன் இருந்து, இனி எதையும் சாதிக்கப் போவது இல்லை. விரைவில் மறுபிறப்பினை அடைவேன். பீஷ்மரின் வீழ்ச்சி யினை காண்பேன்... என்று முடிவு செய்தாள் அம்பை. கானகம் சென்றாள். சிதைகளை அடுக்கி னாள். தீ மூட்டி, கொழுந்துவிட்டு எரிந்த அக்னியில் பிரவேசித்தாள். காவியத்தில் “அம்பை என்ற பெயரில் கொண்ட ஜன்மம்” இந்த நிகழ்வுகளுடன் நிறைவு பெற்றது.

சிவபெருமான் அளித்த வரம் உடனே சித்தி ஆனது. எந்த மன்னனது அரண்மனை வாயிலில் சென்று முருகப் பெருமான் அளித்த மாலையை மாட்டினாளோ, அந்த மன்னனுக்கே மகளாகப் பிறக்கும் வாய்ப்பு உருவானது (இது மகேஸ்வர னின் ஸங்கல்பம். மாற்றிட யாராலும் இயலாது). துருபதன் என்ற மாமன்னன் பாஞ்சாலம் என்ற நாட்டை ஆண்டு வந்தான். அந்த பாஞ்சாலம் என்ற பகுதியே நாம் அறிந்த மேற்கு பஞ்சாப் மற்றும்கிழக்கு பஞ்சாப் இரண்டும் இணைந்த பகுதி. துருபதனுக்கு நெடுநாட்களாக புத்திர சந்தானம் இல்லை.

குழந்தை பேரினை வேண்டி, குறிப்பாக ஒரு ஆண் வாரிசினை வேண்டி... சிவபெருமானை முறை யாக வழிபட்டு வந்தான். கடுமையான விரதங்களை மேற்கொண்டான். குறிப்பிட்ட ஒரு காலத்தில், சிவ

பெருமான் காக்ஷி கொடுத்து அருளினார். விரைவில் உனக்கு ஒரு பெண் மகவு பிறக்கும் என்று அருளி ஆசி வழங்கினார். ஈஸ்வரன் தொடர்ந்து உனக்கு பெண் குழந்தைதான் பிறக்கும். ஆனால் அந்த பெண்ணே பின்னால் "ஆண் மகனாக" மாறி விடு வாள் என்று உறுதியாக ஒரு ஆறுதலும் அளித்தார்.

துருபதனுக்கு பெண் குழந்தை பிறந்தது. சர்வேஸ்வரனான சிவபெருமான் அம்பைக்கு அளித்த வரம் பரிமளித்து துருபதனின் மகளாக உருக் கொண்டது. இதுவே அம்பையின் மறு ஜன்மமாகும்.சிவபெருமான் மீது அசைக்க முடியாத ஆழ்ந்த பக்தி கொண்டிருந்த மன்னன், ஒரு முடிவுக்கு வந்தான். மஹாராணியுடன் கலந்து தீர்க்கமாக ஆலோசனை செய்தான். ஒரு கட்டத்தில் இந்த பெண் ஆணாக மாறி விடுவாள், என்ற ஈசனின் வாக்கு பொய்க்காது என்று திடமான நம்பிக்கை கொண்டு அந்த குழந்தையை "ஆண் மகவு" என்றே அறிவித்து உலகத்தார் நம்பிக்கை கொள்ளும் வண்ணம் "சிகண்டி" என ஓர் ஆண் மகனின் பெயரையே சூட்டினார். உற்றார் சுற்றார் அனைவரும் "அரச குமாரன்" என்றே நம்பி இருந்தனர். (இது எவ்வாறு சாத்தியமாகும் என்று வாசகர்கள் குழம்ப வேண்டாம். தீர்மானம் செய்தது, செயல்படுத்துவது இரண் டுமே நாட்டை ஆளும் மன்னனும் அவனது மஹாராணியும் தான். பழங்காலங்களில் இருந்த "ராஜ விஸ்வாசம்" அளவிட முடியாத ஒன்று. நல்லாட்சி புரியும் மன்னனை நெருங்கி யாரும் எந்த விதமான குழப்பமும் ஏற்படுத்தவே மாட்டார்கள். சிகண்டிக்கு ஒரு அரச குமாரனுக்கு உரிய நடை உடை பாவங் களுடன் ஆயுதப் பயிற்சியுடன் கூடிய கல்வியே போதிக்கப் பட்டது). சிகண்டி வளர்ந்தாள். திருமண வயதை எட்டினாள். பாஞ்சாலத்துடன் நட்பு கொண்டிருந்த தேசங்களுள் "தசார்ணம்" எனப்படும் தேசமும் ஒன்று. அந்த நாட்டை ஹிரண்யவர்மா என்ற மன்னன் ஆட்சி செய்து வந்தான். அவனுக்கு ஒரு பெண் இருந்தாள். துருபதனும் மஹாராணியும் அந்த அரச குமாரியை "சிகண்டிக்கு" விவாஹம் செய்து வைத்த னர். ஹிரண்யவர்மாவின் பெண் மணமுடித்து பாஞ் சல தேச அரண்மனைக்கு அழைத்து வரப்பட்டாள். தனது கணவனின் மனையான அரண்மனைக்கு வந்த பின் பெரும் அதிர்ச்சி அடைந்தாள். தான் மணந்து கொண்டது ஒரு ஆண் அல்ல என்ற உண்மை புரிந்த ஒரு பெண்ணின் மனம் எவ்வாறு நொறுங்கி சிதைந்து போயிருக்கும்?


துக்கம் மேலிட்டு, தனது பணிப்பெண்கள் மூலமாக தான் ஏமாற்றப்பட்டுள்ள கொடுமையை தெரியப்படுத்தினாள். இந்த செய்தியை அறிந்த ஹிரண்யவர்மா, மனம் நொந்து போனான். துடித் தான். துருபதனை உடனே பிடித்து தகுந்த வழியில் தண்டனை கொடுத்து – அடுத்தபடி எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து சிந்திக்கலாம் என முடிவு செய்தான். பாஞ்சால நாட்டின் மீது படையெடுத் தான். அரண்மனையை முற்றுகையிட்டு, துருபதனை உயிரோடு பிடித்து தனது கையினாலேயே கொன்று விடுவது என்று கடுமையான தாக்குதலை நடத்தி னான். வெறி பிடித்த வகையில் நடத்தப் பட்ட தாக்குதலில் இருந்து தப்பிக்க வழியறியாமல்

## தியான சுலோகங்கள்

மயி சன்யஸ்ய சர்வம்
த்வம் ஆத்மானம் யஸ்மிந் தவாஸ்தி ச|
மதர்த்தம் குரு கர்மாணி
மா ச தர்ம வ்யதி க்ரமந் ||

தர்ம மார்க்கத்தை தெரிந்துக்கொண்டு உன்னை என்னிடம் சரணாகதி செய்து விடு! நான் காப்பாற்றுகிறேன்!

**தொகுப்பு : திருநாங்கூர் உ.வே. ஸௌந்திரராஜபட்டர், புதுடில்லி.**



தனக்கு வரமளித்த சிவபெருமானை நோக்கி தனது இருப்பிடத்திலேயே பலவித வழிபாடு களைத் துவங்கினான் துருபதன்.

இவ்விதமான குழப்பங்களைக் கண்டு சிகண்டி மிகவும் அச்சமும் அதிர்ச்சியும் கொண்டாள். தன்னால்தான் தனது தந்தை துருபதனுக்கு இவ்வாறு ஒரு பேராபத்தும் பகைமையும் உருவாயிற்று என்று அதீதமான கவலை கொண்டாள். தனது இந்த ஜன்மத்தையும் அழித்துக் கொள்வோம். தனது தந்தை யின் நிலையில், அவர் தலைநிமிர, நாம் பிராணத்யாகம் செய்து கொள்வதுதான் சரியான வழி... ஒரே வழி என்று முடிவு செய்தாள். தனது அரண்மனையை விட்டு புறப்பட்டு அடர்ந்த வன பிரதேசத்தை அடைந்தாள். தனது வாழ்வினை முடித்துக் கொள்ளும் வழியை தேடி னாள். யக்ஷர்கள் அடிக்கடி வந்து போகும் ஒரு மலையடிவாரத்தினை அடைந்தாள். தனது இறுதியை நெருங்கும் தருணம் என்று முடிவு செய்து கொண்டாள். உளமார சிவபெருமானை பிரார்த்தனை செய்து கொண்டாள்.

ஈஸ்வரன் அளித்த வரம், இல்லாமல் போகுமா? திடீரென்று பெரும் தேஜஸு டன் தெய்வீக சக்தியுடன் ஒரு "யக்ஷன்" அவள் முன் தோன்றினான். ஸ்தூணா கர்ணன் என்பது அவனது பெயர். தாயே என்று அன்புடன் அழைத்தான். சிவபிரானின் மேல் முழு சிந்தனையுடன் இருந்த சிகண்டி திரும்பினாள். "என்னையா அழைத்தீர்கள்" என்று ஆச்சர்யத்துடன் கேட்டாள். யக்ஷன் தொடர்ந்தான். "ஆம் தாயே! நீங்கள் யாரென்று தெரிய வில்லை. நான் ஒரு யக்ஷன். தாங்கள் ஒரு பெண். சரியான சமயத்தில் தங்களது சந்திப்பு. எனக்கு சிவபெருமான் காட்டிய வரமாகத் தெரிகிறது. எனக்கு சம்பவித்துள்ளது ஒரு சங்கடமான நிலைமை. யாராலும் எவரிடமும் இதுவரை கேட்கப்படாத யாசகம் இது. "சில காலத்திற்கு தங்களது பெண்மையை யாசிக்கிறேன். குறிப்பிட்ட காலம் வரை எனது ஆண்மையை ஏற்றுக் கொண்டு தங்களது பெண்மையை தந்திட வேண்டும். தங்களால் இயலுமா? என்றான்.

சிகண்டிக்கு எப்படி இருந்து இருக்கும். பரமேஸ்வரனின் பரிபூர்ண அருள் பொய்யாகி போகுமா. அவள் மனம் ஆனந்தத்தில் பொங்கியது. தான் யாரென்று விபரமாகக் கூறினாள். இருவரும் ஈஸ்வரனின் நாமத்தை ஸ்மரணம் செய்த வண்ணம் ஒருவரை ஒருவர் இலேசாக ஸ்பர்சித்தார்கள். அந்த க்ஷணத்திலேயே அவர்களின் சரீரத்தில் இருந்த ஆண்மையும் பெண்மையும் மாறியது. சிகண்டி என்ற ஆண் நாடு திரும்பினான். தாய் தந்தையர் இருவரையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினான். மாமனார் ஹிரண்யவர்மா, நடந்த அனுபவங்களை உணர்ந்து சிகண்டியை மருமகனாக ஸ்வீகரித்துக் கொண்டார். சிவபெருமான் அருளால் சிகண்டியின் அதிர்ஷ்டம் மேலும் வளர்ந்தது. அவளுக்கு ஆண்மையை வழங்கிய ஸ்தூணா கர்ணன் குபேரனிடம் பெற்ற ஒரு சாபத்தினால் வாழ்நாள் முழுதும் பெண்ணாகவே இருக்க நேர்ந்தது. சிகண்டி ஆணாகவே இருந்தான்.

## வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 70க்கான பதில்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ரு | ப் | ப | தி | சா | ர | ம் | | பை | ர் | 2 தி |
| 3 ந | ன் | ன | ன் | த | லா | க | ர | 4 பி | ப் | வ | ரு |
| ந் | த | ச | ய | 5 து | ள | சி | தா | 6 ச | ர் | னி | ம |
| த | ர | ர் | ச | தா | லி | 7 கா | வ | த் | 8 த | மு | லை |
| கோ | 9 ப | க | ஞ் | | | | ணா | தி | | ர | ந |
| ப | ய் | ங் | 10 ச | ம் | பா | தி | ஷ் | ய | | ச | ம் |
| ர் | வா | 11 ச | | ர | க | | ரு | வா | | ரா | பி |
| ளு | லு | | | 12 ப | லி | 13 க | 14 கி | ன் | | 15 ப | |
| ள் | ல் | வி | கோ | ள் | மா | ரு | பெ | க | ங் | 16 சி | |
| வ | 17 நெ | | | | ள | ட | ர் | க | ங் | ளி | 18 சோ |
| ரு | 22 ஆ | ண் | பா | ள் | கு | சே | | | | | |
| 19 தி | ல | ஹோ | ம | ம் | 20 வ | வை | | ர் | யூ | றை | 21 உ |



# மே 2022
# ராசிப் பலன்கள்



- சேலம் முராரி. எம்.வி. நரநாரயணன், 94422 86213.

**மேஷம்**

குழந்தைகளுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. செலவினங்கள் கட்டுக்குள் இருக்கும். வேலைப்பளு அதிகரிக்கும். உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் கிடைக்கும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். கணவன்–மனைவிக்குள் நல்ல அந்யோன்யம் இருக்கும். புதிய தொழில் முயற்சிகள் செய்ய வேண்டி இருக்கும்.

**ரிஷபம்**

மனக்குழப்பங்கள் தீரும். தொழில் துறை வளர்ச்சி அடையும். நல்ல லாபம் கிடைக்கும். நண்பர்கள்–உறவினர்களால் செலவுகள் அதிகரிக்கும். குடும்ப உறுப்பினர்களாலும் குழந்தைகளாலும் லாபம் அதிகமுண்டு. மளிகைத் தொழில் செய்பவர்கள் நல்ல லாபம் அடைவர். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெற்று நல்ல கல்லூரிகளில் இடம் கிடைக்கப் பெறுவர்.

**மிதுனம்**

தொழில் துறையில் நல்ல வளர்ச்சியும் லாபமும் உண்டு. உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வும் விரும்பிய இடத்தில் இடமாற்றமும் உண்டு. இளைய, மூத்த சகோதரர்களால் நல்ல லாபம் உண்டு. மாணவர்கள் கடுமையாக உழைத்தால் மட்டுமே நல்ல மதிப்பெண் கிடைக்கும். கணவன்–மனைவிக்குள் இருந்த குழப்பங்கள் தீரும்.

**கடகம்**

திருஷ்டி மிக அதிகமாக இருக்கும். அதனால் வளர்ச்சியில் தடை உண்டாகும். ஆரோக்யத்தில் மிகுந்த அக்கறை தேவை. மாதத்தின் பிற்பகுதியில் தொழில் விருத்தி உண்டு. மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை. சிலருக்கு வெளிநாடு சென்று தொழில் புரியும் வாய்ப்பு உண்டு. வரவுக்கு ஏற்ற செலவுகள் உண்டு.

**சிம்மம்**

வேலையில் அல்லது குடியிருக்கும் வீட்டில் மாற்றம் செய்ய வேண்டி இருக்கும். ஆரோக்யத்தில் மிகுந்த அக்கறை தேவை. உப்பு, காரம் குறைத்துக் கொள்வது நல்லது. தாயின் ஆரோக்யம் சீராக இருக்கும். தந்தையின் ஆரோக்யத்தில் மிகுந்த அக்கறை தேவை. மாணவர்கள் உயர் கல்விக்காக வெளியூர் செல்வர். திடீர் பணவரவும் அதற்குரிய செலவுகளும் அதிகரிக்கும்.

**கன்னி**

திருமணமாகாதவர்களுக்கு விரைவில் திருமண வாய்ப்பு உண்டு. இவ்வளவு நாட்கள் செய்த பூஜைகளுக்கு இனி நல்ல பலன்கள் கிடைக்கும். தொழில் துறை வளர்ச்சி உண்டு. குடும்பத்தில் மற்றவர்களுடன் பேசும்போது எச்சரிக்கை தேவை. தேவையற்ற விவாதங்கள் செல்லக் கூடாது. துர்க்கை வழிபாடு செய்தால் குடும்பப் பிரச்சனைகள் தீரும்.

**துலாம்**

ஆரோக்யத்தில் மிகுந்த அக்கறை தேவை. வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. தொழில் துறையில் வேலை பளு அதிகரிக்கும். கணவன்–மனைவிக்குள் சிறு கருத்து வேற்றுமைகள் உண்டாகும். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை. ஞாபக மறதி சரியாக பிரதி சனிக்கிழமை ஆஞ்சநேயரை வழிபடலாம்.

**விருச்சிகம்**

எடுத்த காரியத்தில் வெற்றி நிச்சயம். குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். தெய்வீக யாத்திரையில் நல்ல தரிசனம் கிடைக்கும். திடீர் பணவரவு உண்டு. வீடு–மனை வாங்கும் யோகம் உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். கடன் சுமைகள் குறையும். வேலை வாய்ப்பு இல்லாதவர்களுக்கு இம்மாதம் நிச்சயம் வேலை வாய்ப்பு உண்டு.

**தனசு**

குடும்பப் பிரச்சனைகள் தீரும். நண்பர்கள்–உறவினர்கள் உதவி கிடைக்கும். மாணவர்கள் மிகவும் கடுமையாக உழைத்து நல்ல மதிப்பெண்கள் பெறுவர். இளைய–மூத்த சகோதரர்களுக்கு இருந்த பிரச்சனைகள் தீரும். மனைவியின் ஆரோக்யம் நன்றாக இருக்கும். குடும்பத்தில் மருத்துவச் செலவுகள் குறையும். இம்மாதம் விரயத்தை விட ஆதாயம் அதிகமாகும்.

**மகரம்**

ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. வீடு, மனை, புது வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். மாணவர்கள் மிகவும் கடுமையாக உழைத்தால் மட்டுமே நல்ல மதிப்பெண்கள் பெற முடியும். தொழில் துறையில் புதிய மாற்றங்கள், இடமாற்றங்கள் உண்டாகும். சனிக்கிழமை ஆஞ்சநேயர் வழிபாடு வாழ்க்கையை உயர்த்தும்.

**கும்பம்**

செலவினங்கள் குறையும். வருமானம் அதிகரிக்கும். மனைவி, குழந்தைகளால் தன லாபமும் சந்தோஷமும் உண்டாகும். குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். ஆரோக்யம் சீராக இருக்கும். மருத்துவச் செலவுகள் குறையும். வருமானம் கிடைக்கும். தாய், தந்தையரால் தனலாபம் உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர்.

**மீனம்**

செலவினங்கள் குறையும். வருமானம் அதிகரிக்கும். தேவையற்ற விவாதங்கள் செய்யக் கூடாது. ஆரோக்யத்தில் சிறு குறைபாடுகள் ஏற்பட்டுப் பிறகு சரியாகும். தெய்வீக யாத்திரைகளில் நல்ல தரிசனம் கிடைக்கும். வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. வேலையில் இடமாற்றம் கிடைக்கும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். கடன் சுமைகள் குறையும்.



# பாகற்காய்

தெலுங்கு மூலம் :
டாக்டர். சி.மதுசூதன சர்மா, 90007 61390
தமிழாக்கம் :
திருமதி வி.உஷா, 99850 02156

ஆறு சுவைகளான இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, கார்ப்பு, கசப்பு, துவர்ப்பு ஆகியவற்றுள் ஒன்றான கசப்பு சுவை கொண்ட பாகற்காயின் மருத்துவ குணங்களைப் பற்றி அறிந்து கொள்வோம். இக்காய் உடலில் ஏற்படக் கூடிய பல நோய்களுக்கு அருமருந்தாகும்.

*"ஸ்வஸ்தஸ்ய ஸ்வாஸ்தய ரக்ஷணம்"* என்று கூறுகிறது ஆயுர்வேத மருத்துவம். நம் ஆரோக்கியத்தை மேலும் மெருகூட்ட பயன் படுகிறது. நாம் உண்ணும் உணவுப் பொருட்களில் ஒன்றான காய் பாகற்காய். இது கசப்புத் தன்மை கொண்டது. தற்போது இக்காயை அதிகம் பயன்படுத்துவது இல்லை. நீரிழிவு, உடல் பருமன் போன்ற பல விதமான நோய்கள் இப்போது அதிகமாக உள்ளது.

இதற்குக் காரணம் பாகற்காய் போன்ற கசப்பு சுவை கொண்ட காய்கள் உண்பதைத் தவிர்ப்பதாகும். வாரத்திற்கொருமுறையோ அல்லது மாதத்திற்கு ஒரு முறையோ இக்காயினை நாம் உட்கொள்வதால் நம் உடலில் உள்ள நோய்க் கிருமிகளை அழிக்க முடியும். உடலும் ஆரோக்கிய மாக இருக்க வழி செய்யும். பாகற்காய் சில நீளமாகவும், சில குட்டையாகவும், சில கரும்பச்சை நிறமாகவும், சில வெள்ளை நிறத்துடன் கூடிய இளம்பச்சை நிறமாக வும் இருக்கும். இது பழமாக மாறியபோது சிவப்பு, ஆரஞ்சு நிறத்திலும் இருக்கும்.

இதனை சமஸ்க்ருதத்தில் "காரவேல்ல" என்றும், தெலுங்கில் "காகரகாய" என்றும், ஆங்கிலத் தில் பிட்டர் கார்ட் என்றும் அழைக்கப்படும். இதன் தாவரப் பெயர் குருர்பிடேசி என்றும் அறிவியல் பெயர் மொமார்டிக சாரேன்ஷியா என்றும் கூறுவர்.

பாகற்காயினால் காரக் குழம்பு, பொறியல், வறுவல், ஊறுகாய் போன்றவற்றை தயாரிப்பர்.

சிலர் இதனுடைய கசப்புத் தன்மை குறைய முதலில் பாகற்காயை உப்பு தண்ணீரில் சிறிது நேரம் ஊற வைப்பர். இவ்வாறு செய்வதன் மூலம் கசப்புத் தன்மையுடன் அதன் சத்தும் குறைகிறது.

பாகற்காயை வட்டமாக அறுத்து காய வைத்து, ஒரு டப்பாவில் சேகரித்து வைத்துக் கொண்டால், நமக்கு வேண்டும் போது உபயோகித்துக் கொள்ள லாம். மேலும் காய வைத்ததை நன்றாக வறுத்துக் கொண்டு பருப்பு சாதத்துடன் சாப்பிட்டால் மிகவும் சுவையாக இருக்கும்.

மருத்துவ குணம் மிக்க இக்காய் எவ்விதமான நோய்களைப் போக்கும் மருந்தாகப் பயன்படுகிறது என்பதைப் பற்றி அறிந்து கொள்ளலாம்.

**மலச்சிக்கல் நீங்க :**

நாள்தோறும் உறங்கும் முன் அரை டீஸ்பூன் முதல் ஒரு டீஸ்பூன் வரை பாகற்காயை அரைத்து



வைத்துக் கொண்டு தேனுடன் கலந்து உட்கொண்டால் மலச்சிக்கல் குறையும். மேலும் வயிற்றுப் பூச்சிகளும் அழியும்.

**சர்க்கரை வியாதி (நீரிழிவு) கட்டுப்படுத்த :**

பாகற்காயை சிறிய துண்டுகளாக்கி, அதனை நன்கு காய வைத்து பொடியாக்கிக் கொள்ள வேண்டும். அதனுடன் ஆயுர்வேத மருந்துக் கடையில் கிடைக்கப்பெறும் “பாடபத்ரி” மற்றும் நாவல்பழ விதைப்பொடி ஆகியவற்றை ஒவ்வொன்றையும் 50 கிராம் வீதம் எடுத்துக் கொள்ள வேண்டும். காலை, மாலை நேரங்களில் 2–3 கிராம் பொடியை 50 மி.லி. நீரில் கலந்து குடிக்க வேண்டும். இவ்வாறு செய்தால் சர்க்கரை வியாதி குறையும். கட்டுபாட்டுடன் இருக்கும்.

**முழங்கால் வலி நீங்க :**

பாகற்காய் துண்டுகளை சிறிது நீர் சேர்த்து மிருதுவாக அரைத்து 8 பங்கு மஞ்சள் சேர்த்து காலிற்கு பூசி வந்தால் முழங்கால் வலி குறையும். பூசியவை ஆறியபின் காலைக் கழுவி விடலாம். முழங்கால் தசைகள் வலுப்பெறும். இம்மருந்தினை கை கால்களில் ஏற்பட்ட வெடிப்புகளுக்கும் பூசலாம்.

**மூல வியாதி :**

நாள்தோறும் இரவு படுக்கச்செல்லும் முன் 25 மி.லி. பாகற்காய் இரசத்தில் அரை டீஸ்பூன் பாகற்காய் பொடி, 2–3 சிட்டிகை உப்பு சேர்த்து உட்கொண்டால் மூல வியாதி குறையும்.

**முடி உதிர்வு குறைய :**

வாரத்திற்கு 2 முறை 50 மி.லி. பாகற்காய் இரசத்தில் அரை டீஸ்பூன் சர்க்கரை சேர்த்து தலை முழுவதும் பூசி அரைமணி நேரம் விட்டு வெதுவெதுப்பான நீரில் தலைக்குளியல் செய்தால் பொடுகுத் தொல்லை நீங்கும். முடி கருமையாகவும், அழகாகவும் பளபளப்பாகவும் இருக்கும்.

**தோல் வியாதிகள் நீங்க :**

நாள்தோறும் வெறும் வயிற்றில் 20 மி.லி. பாகற்காய் ரசத்தில் 5 மி.லி. எலுமிச்சை ரசம் கலந்து உட்கொண்டால் உடல் அரிப்பு மற்றும் சொரி, சிரங்கு, சோரியாஸிஸ் படர்தாமரை போன்ற பலவித நோய்கள் நீங்கும். இம்மருந்து இரத்தத்தை தூய்மை ஆக்குகிறது.



உடலில் அதிக மாக இருக்கும் கொழுப்புச் சத்து குறைய துணை புரி கிறது. மேலும் நோய் தடுப்புச் சத்து அதிகமாகும்.

**கால், கை விரல்களின் நடுவே வரும் புண்கள் குறைய :**

நாள்தோறும் ஒரு முறை பாகற்காயை துண்டுகளாக்கி தகுந்த அளவு மஞ்சள் உப்பு சேர்த்து மிருதுவாக அரைத்து பூசிக் கொண் டால் கை கால் விரல்களின் நடுவே ஏற்படும் புண்கள் குறையும்.

**குறிப்பு :**

மருந்துகளை உபயோகிப்பதற்கு முன்பு ஆயுர் வேத மருத்துவரை அணுகி, ஆலோசனைப் பெறவும். இக் கட்டுரை வாசகர்கள் பொது அறிவை வளர்த்துக் கொள்ளவேத் தவிர நோய்களுக்கு நிரந்தர தீர்விற்கு அல்ல.

**தடை விதிக்கப்பட்ட பொருட்கள்**

**திருமலை ஆலயத்திற்குள் தேங்காய், செல்போன், டிஜிட்டல் கைகடிகாரங்கள் போன்ற மின்னணு பொருட்கள், காலணிகள், வெடிப்பொருட்கள், பிளாஷ்டிக் பொருட்கள் எடுத்து செல்லுதல் கூடாது**

## இதில் பொருந்தாதது எது?



குறிப்பு : ஹனுமன், பிரகலாதன், மத்ஸ்ய அவதாரம், அக்ஷய திருதியை இவற்றிற்கு தொடர்பு இல்லாதவற்றை கட்டத்தில் எழுதவும்.




இரண்டு சித்திரங்களுக்கு இடையே உள்ள ஏழு வித்தியாசங்களை கண்டு பிடியுங்கள்




1) சூரியன்
2) கீழ் நோக்கி பறக்கும் பறவை
3) வாழை இலை
4) பூக்கள்
5) ஓலைப்பாய் விரிப்பான்
6) மேல் நோக்கி பறக்கும் பறவை
7) மரவேலி

நீதிக் கதை



# உலகில் என்னுடையது என்பது எதுவுமில்லை

யாஜ்ஞவல்க்ய மஹரிஷியிடம் காட்டில் ஜனக மஹாராஜாவும், மற்ற மஹரிஷிகளும் பிரம்ம வித்யை காலக்ஷேபம் கேட்டு வந்தனர். யாக்ஞ வல்க்ய மஹரிஷிக்கு ஜனகரிடம் தனி பரிவு உண்டு. இதைக்கண்ட மற்ற மஹரிஷிகள் குருவிற்கு நம்மை விட, ஜனகரிடமே பரிவும் அன்பும் அதிகம் என்று மனம் வெதும்பினர். இதை மஹரிஷி அறிந்தார்.

ஒரு நாள் வகுப்பிற்கு ஜனகர் சிறிது காலதாமதமாகச் சென்றார். ஜனகர் வரும்வரை மஹரிஷி பாடம் நடத்தாதிருந்தார். அவர் வந்ததும் காலக்ஷேபம் தொடங்கினார். இதைக்கண்ட மற்ற மஹரிஷிகள் பொறாமையால் வெம்பினர். ஒரு நாள் காலக்ஷேபம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது தனது தவ வலிமையால் யாஜ்ஞவல்க்யர் மிதிலை நகரம் பற்றி எரிவது போன்ற ஒரு மாயையை உருவாக்கினார். இடையில் அரசாங்க தூதுவன் ஓடி வந்து, "மிதிலை பற்றி எரிகிறது. விரையுங்கள்" என ஜனகரைப் பார்த்து அலறினான்.

உடனே வகுப்பில் இருந்த மஹரிஷிகள், ஸந்யாசிகள் அனைவரும் மிதிலை அருகேயுள்ள தங்கள் மடத்தில் இருக்கும் வஸ்த்ரம், பிக்ஷா பாத்ரம், இதர பொருட்கள் மிதிலையின் தீயினால் பற்றி எரிந்து விடுமென பதறிப் போய் குருவிடம் சொல்லிக் கொள்ளாமல் ஓடி விட்டனர். ஜனக மஹாராஜா நகரவில்லை. குருவினால் வற்புறுத்தப்பட்டும் அசையவில்லை. ஏன் என குரு ஜனகரைக் கேட்டார்.

*"அனந்தம் பதமே வித்தம் யஸ்யமே நாஸ்திகிஞ்சன*
*மிதிலாயாம் ப்ரதீப் தாயாம் நமேகிஞ்சித் ப்ரதஹ்யதே*
*ஸர்வம் கலு இதும் ப்ரஹ்ம தஜ்ஜலானிதி சாந்த உபாஸீத"*

ஜனகர் குருவிடம், மிதிலை நகரம் தீப்பற்றி எரிந்தால் எனக்கு என்ன நஷ்டம்? எனக்கும் மிதிலைக்கும் என்ன சம்பந்தம் ஸ்வாமி! அனைத்தும் எம்பெருமானுடையதன்றோ! எல்லா உலகப் பொருட்களும் எம்பெருமானிடமிருந்து தோன்றி, அவனால் வாழ்ந்து, அவனிடமே லயத்தை அடைகிறதன்றோ!

இது முதலிய தேவரீர் உபதேசத்தால் எங்கும் பிரம்மத்தைக் காணும் எனக்கு கவலை ஏது? என்று கூறினார். மடத்திற்கு ஓடிச் சென்று திரும்பியவர்கள் ஜனகரின் வார்த்தைகளைக் கண்டு வெட்கித் தலைகுனிந்தனர்.

யாஜ்ஞவல்க்ய மஹரிஷி அவர்களைப் பார்த்து, பெரிய ராஜ்யமே தன்னுடையதாயிருக்க அவர் எழுந்து ஓடவில்லை. சிறிய பொருட்களுக்காக என்னிடம் கூட சொல்லாமல் ஓடினீர்களே, தத்வ ஞானியான ஜனகர் எங்கே? நீங்கள் எங்கே? என்றார்.


நீதி : உலகில் எதுவுமே என்னுடையது என்பது இல்லை. இந்த உலகில் உள்ள அனைத்தும் எம்பெருமானுக்குச் சொந்தமானது. எதுவும் நமக்கு சொந்தமானது அல்ல.


**திரு. ஜெ. சுவாமிநாதன்,**
**சென்னை.**

# ஹனுமனின் பக்தி

சித்திரக் கதை

கதை மூலம் : திரு. ஸ்ரீநிவாச தீக்ஷிதுலு
சித்திரம் : திரு. துவாரகநாத்






அடுத்த இதழில் வேறொரு கதையை பார்த்து படித்து மகிழலாம்.

முற்றும்.

ப ல் சு வை  ப கு தி

## சித்திரம் வரைதல்

இந்த சித்திரத்திற்கு வண்ணம் தீட்டுவோமா...

பக்கத்தில் உள்ள படத்தை இந்த கட்டத்தில் வரையுங்கள்...



## பொருத்துக...

| | | |
|---|---|---|
| 1. நரசிம்மர் | - | அ. அத்வைதம் |
| 2. சங்கரர் | - | ஆ. சித்திரை |
| 3. சித்திரை | - | இ. அகோபிலம் |
| 4. மதுரகவி | - | ஈ. அன்னமய்யா |
| 5. நந்தகம் | - | உ. இராமாநுஜர் |

1.இ, 2.அ, 3.உ, 4.ஆ, 5.ஈ.

## பாடல் அறிவோம்...



“அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே
ஒன்றைத்தாவி
அஞ்சிலே ஒன்று ஆறு ஆக, ஆர்
உயிர்க்காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக்
கண்டு அயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்று வைத்தான் அவன் நம்மை
அளித்துக்காப்பான்”

- கம்பர்

## வார்த்தைகளை சரியாக அணிவகுத்து வாக்கியம் அமைக்கவும்...

பக்த நாமும் பிரகலாதனைப் செலுத்துவோம் பக்தி எம்பெருமானிடத்தில் நீங்கா போன்று

பக்த பிரகலாதனைப் போன்று நாமும் எம்பெருமானிடத்தில் நீங்கா பக்தி செலுத்தவோம்



## பாதையைக் கண்டுபிடி

ஸ்ரீமஹாவிஷ்ணுவை இமை பொழுதும் இடைவிடாமல் வணங்கிய பிரகலாதனின் பக்திக்காக (தூணிலிருந்து வெளிப்பட்டு) அவதாரமெடுத்த அழகியசிங்கரான ஸ்ரீநரசிம்மரைக் கண்டு வணங்க அந்த சிறுவனான பக்த பிரகலாதனுக்கு வழிக்காட்டிடுங்கள்.

## விடுகதை பகுதி...

1. அமைதியான பையன் அடிக்காமலே அழுவான் அவன் யார்?
2. ஒளி கொடுக்கும், விளக்கல்ல; சூடு கொடுக்கும், தீ அல்ல; பளப்பளக்கும், தங்கம் அல்ல அது என்ன ?
3. அள்ள முடியும். ஆனால் கிள்ள முடியாது. அது என்ன ?

1. ஐஸ்கட்டி, 2.சூரியன்
3.தண்ணீர்



Printed by Sri P. Ramaraju, M.A., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Phd., on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.






02-04-2022 அன்று மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த திருமலை ஆலயத்தில் நடைபெற்ற சுபகிருது வருட உகாதி ஆஸ்தானத் திருக்காட்சிகள்





2022, எப்ரல் 4 முதல் 6 வரை திருமலையில் தர்மகிரி ஸ்ரீவேங்கடேஸ்வர வேத விக்ஞான பீடத்தில் நடைபெற்ற ஸ்ரீலக்ஷ்மி ஸ்ரீநிவாச தன்வந்திரி மஹா யாக திருக்காட்சிகள்.





ஸ்விம்ஸ்–டாடா புற்றுநோய் மருத்துவமனை கட்டுமானப்பணிகளை தனிக்கை செய்யும் தி.தி.தே. செயலாட்சித் தலைவர் டாக்டர் கே.எஸ்.ஜவஹர் ரெட்டி ஐ.ஏ.எஸ். அவர்களுடன் தி.தி.தே. இணைச்செயலாட்சித் தலைவர் திரு. வீரப்ரம்ஹம் ஐ.ஏ.எஸ். அவர்கள், ஸ்விம்ஸ் இயக்குனர் டாக்டர். பி. வெங்கம்மா அவர்கள், டாடா புற்றுநோய் மருத்துவமனை பொறுப்பாளர் டாக்டர் பி.ஆர். ரமணன் அவர்கள் மற்றும் தி.தி.தே. உயர் அதிகாரிகள் பங்கு கொண்டபோது

SAPTHAGIRI (TAMIL) ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-04-2022 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No.APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/2021-2023 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No. PMGK/RNP/WPP-04(5)/2021-2023" Posting on 20th of Every month.



அஞ்ஜநாத்ரி தடே ஜாதம்
அஞ்ஜநாயாஸ்தப: பலம் |
சேஷாசலாத்ர வேர்லோகம் ப்ரயாதம்
நௌமி மாருதிம் ||